86
669

ல ர ங் ம ன் ஸ்



தமிழ்ப் பாடம்

ஐந்தாம் புத்தகம்

ம. வீ. இராமானுஜாசார்யர்

No : 665 64.

லாங்மன்ஸ்

தமிழ்ப் பாடம்

ஐந்தாம் புத்தகம்

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் ரிடயர்ட் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் தமிழ் மஹாபாரதப் பதிப்பாசிரியருமாகிய பாஷாபாரத துரந்தரர், மஹா மஹோபாத்தியாயர்

ம. வீ. இராமானுஜாசார்யர்

இயற்றியது

லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பனி, லிமிடெட்
36A, மௌண்ட் ரோட், மதரூஸ்,
கல்கத்தா, பம்பாய்.
1939

All Rights Reserved

WITH THE COMPLIMENTS OF
LONGMANS, GREEN & Co., Ltd.

First Printed 1936.
Second Impression 1939.

முகவுரை

இந்தப் புத்தகத்தைப் பார்க்கும் அன்பர்கள் இந்த வரிசையில் முன்னமே வெளிவந்துள்ள முதல் நான்கு புத்தகங்களையும் பார்த்திருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன், இந்த முகவுரையில் இன்றியமையாத சில குறிப்புக்களை மாத்திரம் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த வரிசையான பாட புத்தகங்கள் சில குறிப்பிட்ட நோக்கங்களுடன் முறையாக எழுதப்படுகின்றன. நமது நாட்டுச் சிறுவர் சிறுமியர்களின் ஆரம்பப் படிப்பு, பல பிரிவுகளை உடையது. அவற்றுள், தாய்ப் பாஷையில் அறிவைப் பெருக்குவதும் ஒன்று. இப்புத்தகங்கள், அந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய முறையில் சிற்சில வரையறைகளுக்கு உட்பட்டு எழுதப்பட்டுள்ளன. ஆதலின், இவை அந்த அறிவை ஓரளவு வளர்க்கும் என்பது எனது துணிபு.

மூன் புத்தகங்களைப் படித்தறிந்த சிறுவர் சிறுமியர், தாம் பார்க்கும் சிறியவும் பெரியவுமாகிய தொடர்மொழிகளைப் படிக்கும் திறமையைப் பெற்றிருத்தல் கூடும். அந்நிலையில், அவர்களுக்கு முன் படித்தவற்றைக் காட்டிலும் வேறுனவையும் சிறிது விரிவான்வையுமாகிய புதியவற்றைப் படிக்கவேண்டுமென்னும் விருப்பம் உண்டாவது இயல்பே. அந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் துணைபுரியும் முறையிலேயே இப்புத்தகம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகத்துள், நீதிக்கதைகள், புனைகதைகள், பொது அறிவு, பெரியோர்களின் சரித்திரம், கைத்தொழில் முதலியன வசனபாடங்களாக விரிந்த முறையில் அமைந்துள்ளன. வழக்கம்போலப் பெரும்பாலான பாடங்களில் கற்போர்க்குக் கருத்தை எளிதில் விளக்கி மனத்தே பதியச்செய்யும் படங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கற்போர்களது கருத்தில் ஊன்றி நின்று, பிற்கால வாழ்க்கைக்கும் பயன்படும் பல சிறந்த செய்யுட்கள் இறுதியில் செய்யுட் பாடமாக அமைந்திருக்கின்றன. அவை முற்றும் மனப்பாடமாதல் மிகச் சிறந்ததாகும். இதனைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதனுள் செய்யப்பெற வேண்டிய சீர்திருத்தங்களை, தயைசெய்து தெரிவிப்பார்களாஞல், அவற்றை, வந்தனம் செய்து ஏற்று, அடுத்த பதிப்பில் இயன்றவரை செய்விக்க முயல்வேன்.

இங்ஙனம்,

ம. வீ. ரா.

பாட அட்டவணை

I. வசனப் பகுதி

பாடம்			பக்கம்
1.	புரு	...	1
2.	பரோபகாரம்	...	4
3.	குரங்கு	...	8
4.	புதையல்	...	12
5.	சவுக்காரம்	...	15
6.	ஒரு நரியின் தந்திரம்	...	18
7.	வேப்பமரம்	...	21
8.	புத்திமான் பலவானுவான்	...	26
9.	பறங்கி	...	30
10.	பண ஆசை	...	34
11.	தண்ணீர்	...	38
12.	கொடைச் சிறப்பு	...	41
13.	உணவு	...	45
14.	பெற்றோர்களிடம் அன்பு	...	48
15.	தவளை	...	51
16.	பொறுமையுள்ள வேலைக்காரன்	...	56
17.	சர்க்கரை	...	60
18.	உபமன்யு	...	65
19.	ஆடை	...	71
20.	திணை, பால், எண், இடம்	...	75
21.	தீபாவளி	...	81
22.	ஸேவிங்க்ஸ் பாங்கி (சம்பாஷணை)	...	84
23.	வண்ணத்திப்பூச்சி	...	87

பாடம்			பககம்
24.	பச்சையப்பர்	...	91
25.	நமது உடல்	...	96
26.	பழமொழிகள்	...	101

II. செய்யுட்பகுதி

27.	வாக்குண்டாம்	...	102
28.	நல்வழி	...	104
29.	நீதி வெண்பா	...	105
30.	விவேக சிந்தாமணி	...	107
31.	பஞ்சதந்திரப் பாடல் (முயல் சிங்கத்தைக் கொன்ற கதை)	...	108
	செய்யுட்பகுதி: அரும்பதவுரை	...	111




T.R. III.

தவளைகள் : కప్పలు

1. புறு

புறு, வீட்டில் வளர்க்கும் பறவைகளில் ஒன்றாகும். வளர்க்கப்படாத புறுக்களுக்குக் காட்டுப் புறுக்கள் என்று பெயர். புறுக்களில் சில வெண்மையாகவும், சில கருமையாகவும், சில கருஞ்சிவப்பாகவும் இருக்கும். வேறு சில, சாம்பல் நிறமாக இருப்பதோடு பல நிறங்கள் கலந்தனவாகவும் இருக்கும்.



புறுக்களுக்குத் தாங்கள் வசிக்குமிடத்தில் பற்றுதல் அதிகம். அவைகளை வெகுதூரத்திற்கு அப்பால் கொண்டுபோய் விட்டாலும் அவை திரும்பவும் தாங்கள் இருந்த இடத்திற்குப் பறந்து வந்துவிடும்.

புறுக்களின் எலும்புகள் நம்முடைய எலும்புகளைப்போலக் கெட்டியாக இல்லாமல் உட்புறம் கூடாக இருக்கும். ஆகையால், அவை பளுவாக இருப்பதில்லை. அவற்றின் மிக்க வலிமையுள்ள செட்டைகளும் வால் நுனிவரையில் நீண்டு ஒடுங்கிக் கூராய் இருக்கும். அதனால், புறுக்கள் ஆச்சரியப்படும்படியான வேகத்துடன் பறக்கின்றன.

புறுவின் தேகத்தைத் தொட்டுப் பார்த்தால், அது மிக உஷ்ணமாக இருக்கும். எல்லா ஜீவ ஜந்துக்களிலும் பறவைகளின் உடலே மிகச் சூடாக இருக்கும். புறு சுகமாக இருக்க, இந்தச் சூடு ஒரே அளவாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அதன் சுறுசுறுப்புக் குறைந்துவிடும்; இறந்தும் போகும். தேக அனல் குறையாமற் காப்பாற்று வது அதன் தேகத்தை மூடிக்கொண்டிருக்கும் இறகுபோர்வையே.

அந்த இறகுகளில் இரண்டு வகை உண்டு. தேகத்தை ஒட்டிப் பஞ்சுபோல மெதுவாக இருப் பவை ஒருவகை. இவற்றுக்கு மேலிருக்கும் மெல்லிய சிறு இறகுகள் மற்றொருவகை. அவை தேகத்திற்கு ஒருவித அமைப்பைத் தருகின்றன. இறக்கைகளிலும் வாலிலுமிருக்கும் இறகுகளே பறக்க உதவியாயிருப்பவை. புறுவின் வால்பக்க மாக ஒரு தைலப்பை இருக்கிறது. இதிலிருக்கும் எண்ணெயைப் புறு அலகால் எடுத்து இறகுகளில் தடவி வாரி, பறக்கும்போது காற்றில் திரையாதபடி ஒழுங்குபடுத்திக் கொள்கிறது.

புறு தானிய வகைகளைத் தின்று ஜீவிக்கிறது. பகல் முழுதும் அது ஆகாரத்தைத் தேடித்திரியும். அதன் பெரிய கண்கள் கூர்மையான பார்வையுள்ள வை. அவற்றால் அது பூமியில் சிதறுண்டு கிடக்கும் சிறு தானிய மணிகளையும் இலகுவாய்ப் பார்க் கிறது. புறுக்கள் கூட்டங் கூட்டமாய் ஆகாரத்தைத் தேட நெடுந்தூரம் பறந்து செல்லும். புறுவின்

அலகு குட்டையானது; அழுத்தமானதன்று; ஆனால், ஆகாரத்தைப் பொறுக்கமுடியும். கானிய மணிகளை நசுக்கவோ அவற்றின் தோலை உரிக்கவோ அதனால் சாத்தியப்படுகிறதில்லை. ஆகவே, கானியங்களை அது அப்படியே விழுங்கிவிடுகிறது.

இப்படி விழுங்கிய ஆகாரம் ஒரு பெரும்பையில் சேர்ந்து ஊறுகிறது; பிறகு, இரைப்பைக்குள் செல்லுகிறது. அங்கே அது நன்றாக அரைக்கப்பட்டு ஜீர்ணமாகின்றது. புறா தண்ணீரைத் தாராளமாக அருந்தும். அது மற்றப் பட்சிகளைப் போல நீரை அலகினால் எடுத்துத் தலையை நிமிர்த்துக் குடிக்கிறதில்லை. நாற்காற் பிராணிகள் தண்ணீர் குடிப்பதுபோலப் புறா தன் அலகை நீரினுள் வைத்துக்கொண்டு வேண்டியமட்டும் நீரை உறிஞ்சிக் குடிக்கும்.

முட்டையிடும் காலம் சமீபித்தவுடன், புறாக்கள் ஆணும் பெண்ணுமாகக் கூடுகட்டி முடிக்கும். அதில் பெண்புறா இரண்டு முட்டைகளை இடும். இம் முட்டைகளைப் புறாக்கள் ஆணும் பெண்ணுமாக மாறிமாறி அடைகாக்கும். முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிப்படச் சுமார் மூன்று வாரங்கள் ஆகும். முட்டைகள் பொரிவதற்கு மூன்று நான்கு நாட்களுக்கு முந்தி அவைகளைக் காதண்டை வைத்துப் பார்த்தால் உள்ளிருந்து 'டிக், டிக்' என்னும் ஒருவிதச் சத்தம் கேட்கும். இதனால், முட்டைக்குள் குஞ்சு உயிருடன் இருப்பதாகத் தெரிந்து கொள்ளலாம்.

முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட்டதும் அவற்றின் கண் திறவாமல் மூடிக்கொண்டிருக்கும்; ஐந்து நாட்களுக்குப் பிறகே, கண் திறக்கும். போதுமான வளர்ச்சியடையும் வரையில், புரு தன் குஞ்சுகளுக்கு ஆகாரம் ஊட்டி அவற்றை வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாயிருக்கும்.

புருக்கள் தங்கள் தேகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும்; இதற்காக அனேகமாய்த் தினந்தோறும் தண்ணீரில் குளிப்பது வழக்கம்; அலகினால், இறக்கைகளைக் கோதிச் சுத்தம் செய்துகொள்ளும். குஞ்சுகளுக்கும் தண்ணீரைக் கண்டால் ஆனந்தம் அதிகம்.

புருக்கள் பலவிதமாகக் கூவும். குஞ்சுகளை அழைக்கவும், சத்துருவுடன் சண்டை செய்யவும், அபாயத்தை அறிவிக்கவும் பலவேறு விதமாகக் கூவும்.

புறம் செட்டை திரை

பயிற்சி :—1. சிறு இறகுகளின் உபயோகம் என்ன? எந்த இறகுகள் பறக்க உதவியாகும்? 2. புரு வேகமாகப் பறப்பதற்கு ஏற்றபடி அதன் தேகம் எவ்வாறு அமைந்திருக்கிறது? 3. புருக்கள் எப்படித் தங்கள் உடம்பைச் சுத்தம் செய்துகொள்ளுகின்றன?

2. பரோபகாரம்

ஒரு வனத்திலுள்ள மரம் ஒன்றில் ஆணும் பெண்ணுமான இரண்டு புருக்கள் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. ஒரு நாள், அவற்றுள் ஒன்றுகிய


பெண் புரு, இரை தேட வெளியே சென்றது; பெருங் காற்றிலும் மழையிலும் அலைந்து குளிரால் துன்பமடைந்து பூமியில் விழுந்து கிடந்தது. வேடன் ஒருவன் அதை எடுத்துக் கூட்டில் போட்டுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பலானன்.

திரும்பி வருகையில், காற்றும் மழையும் அதிக மாக, அவன், குளிர் பொறுக்கமாட்டாமல் வருந்தி னன். அவன், அந்தப் புருக்கள் கூடுகட்டி வாழும் மரத்தினடியில் வந்து ஒதுங்கினன். அவன், "ஓ, ஈசனே! குளிரோ பொறுக்க முடியவில்லை. பசியோ அதிகரிக்கின்றது. மழையும் காற்றும் நிற்கவில்லை. என்ன செய்வேன்? எவ்வாறு வீட்டிற்குப் போய்ச் சேருவேன்? இருட்டும் அதிகமாகின்றதே!" என்று மிக்க வருத்தத்துடன் கூறினன். பிறகு, ஒரு கல் லின்மேல் இலைகளைப் பரப்பித் தலையை வைத்துக் கொண்டு உறங்கத் தொடங்கினன்.

அப்பொழுது, மரத்தின் மேலிருந்த ஆண் புரு, பெண் புரு வராததைக் கண்டு வருந்தி, "கடவுளே! நெடுநேரமாகியும் எனது மனைவி வீட்டிற்குத் திரும்பி வரவில்லையே! யாது காரணமோ தெரிய வில்லை; என்னலும் வெளியே சென்று பார்க்க முடியவில்லை; அவளை யாரேனும் பிடித்துக்கொண் டனரோ?" என்று புலம்பிற்று.

மரத்தின் அடியில் இருந்த வேடனது கூட்டி லிருக்கும் பெண் புரு தனது நாயகனது புலம்பலைக் கேட்டது; அது, தலையைத் தூக்கிப் பார்த்து, "நாதா!

எனது தீவினைப் பயனால் நான் இந்த வேடன் கையில் சிக்குண்டேன். இனி, தாங்கள் என்னைப் பற்றி வருந்த வேண்டாம். நிற்க, நம்முடைய வீட்டிற்கு வந்த விருந்தினனை ஆதரிப்பது நமது கடமை யல்லவா? இவ்வேடனை குளிரினாலும் பசியினாலும் வருத்தப்பட்டு இங்கே வந்திருக்கிறான். 'இவன் நமது மனைவியைப் பிடித்துவிட்டானே' என்று



எண்ணுமல் இவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வீராக'' என்று கூறிற்று.

மரத்தின் மேலிருந்த ஆண் புறா, தனது மனைவி யின் மொழிகளைக்கேட்டு, வேடனை நோக்கி, ''ஐயா! உமது வரவு நல்வரவாகுக. நீர் வேறு இடத்தில் இருப்பதாக நினைக்கவேண்டாம்; சொந்த வீட்டில் இருப்பதாகவே எண்ணிக்கொள்ளும். உமக்கு

வேண்டியவற்றைக் கேளும்; என்னால் இயன்ற வரையில் உமது விருப்பத்தை நிறைவேற்ற முயலு வேன்'' என்றது.

வேடன், மரத்தின்மேலிருந்து வரும் குரலைக் கேட்டு அண்ணாந்து பார்த்து, ''புறவே! என்னால் குளிரையும் பசியையும் பொறுக்க முடியவில்லை. முதலில் எனது குளிரைப் போக்கு. பின்னர் ஏதாவது உணவு கொடு'' என்றான். அதனைக்கேட்ட ஆண் புறா, சருகுகளைச் சேர்த்துக் குவியலாக்கியது; ஒரு கொள்ளிக் கட்டையைக் கொணர்ந்து தீ மூட்டியது. வேடன் அழலின் அருகிற் சென்று குளிர் காய்ந்தான். அப்பால், அந்த ஆண் புறா, வேடனைப் பார்த்து, ''ஐயா! உமது பசியை நீக்க என்னிடத்தில் ஒன்றுமில்லை. இல்லாள் இல்லாத வீட்டிலே என்ன கிடைக்கும்? என்றாலும், உமது பசியைத் தணிப்பது எனது கடமையாகும். ஆதலால், என்னையே உமக்கு உணவாகத் தருகிறேன். மனைவியைப் பிரிந்து உயிர்வாழ விரும்பாத எனக்கு, இது நல்ல சமயமாகும். பிறருக்குப் பயன்படாமல் உயிருடனிருப்பது சிறப்பாகாது'' என்று கூறிக்கொண்டே அந்தத் தீயில் விழுந்தது.

அதைக் கண்ட வேடன் மிக வியப்புற்றான்; ''ஆ! இந்தப் புறாவின் பரோபகாரகுணம் எவ்வளவு சிறந்தது! என்னிடத்தில் இப்படிப்பட்ட சிறந்த குணம் சிறிதும் இல்லாது போயிற்றே!'' என்று வருந்தினான்; தான் பிடித்து வைத்திருந்த பெண் புறாவை விட்டுவிட்டான். அந்தப் பெண் புறாவும்,

வேடனைப் பார்த்து, "ஐயா! நாயகனை இழந்த பிறகு, நான் உயிர் வாழ விரும்பவில்லை. நானும் எனது கணவர் குதித்த தீயிலே குதிக்கிறேன். எங்கள் இருவருடைய மாமிசங்களையும் உண்டு, பசியைத் தீர்த்துக்கொள்ளும்" என்று கூறிக்கொண்டு அத் தீயில் விழுந்தது. சற்றுநேரத்தில் அந்த இரண்டு புறுக்களும் தெய்வ சரீரத்துடன் விமானத்தில் ஏறிச் சென்றன.

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த வேடன் புறுக்களின் பரோபகாரச் செயல்களையும், அவை பெற்ற சிறப்பினையும் எண்ணி எண்ணி ஆச்சரியங் கொண்டான்; தனது நிலைமையைக் குறித்து வருந்தினன்; 'எந்த உயிருக்கும் தீங்கு செய்வதில்லை' என்று தீர்மானம் செய்துகொண்டு வீட்டுக்குப் போனன்.

உறங்கு	நாயகன்	புலம்பல்
அண்ணாந்து	அழல்	இல்லாள்

பயிற்சி:—1. பரோபகாரம் என்றால் என்ன? 2. ஆண் புறு வேடனைப்பார்த்து என்ன கூறியது? 3. வேடன் எதைக்குறித்து வருந்தினன்? எப்பொழுது? 4. வேட னுடைய குணம் மாறியதனால் விளங்கும் நீதி யாது? 5. புறு வைப்பற்றி வேறொரு கதை எழுது.

3. குரங்கு

குரங்கு, குட்டிகளுக்குப் பால்கொடுத்து வளர்க் கும் இனத்தைச் சேர்ந்தது. குரங்கிற்குக் கால் களும் கைகளைப்போலப் பயன்படுகின்றன. ஆத


லால், இதற்கு நாலுகைப்பிராணி என்றும் பெயர் வழங்குகிறது.

குரங்குகள் இந்தியா, இலட்சத்தீவுகள், சின்ன ஆசியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் இருக்கின்றன. அவ்விடங்களில் அவற்றிற்கு ஆகாரம் கிடைக்கக்கூடிய காடுகள், மலைகள், தோப்புக்கள் இவைகளில் அவை அதிகமாகக் காணப்படும்.

குரங்குகள் இறைச்சியைத் தவிர, மனிதர்களுக்கு ஆகாரமாகக் கூடிய எதையும் தின்னும். கரும்பு, பழவகை இவைகளில் இவற்றிற்கு மிகப் பிரியம். இவற்றிற்குக் கன்னத்தின் இரு புறங்களிலும் பைகள் உண்டு. இவற்றில் ஆகாரத்தை நிரப்பி வைத்துக்கொண்டு, பிறகு கொஞ்சங் கொஞ்சமாக மென்று விழுங்கும். கிராமங்களுக்கு அருகிலுள்ள தோப்புக்களிலிருக்கும் குரங்குகள் கிராமங்களுக்குள் போய் அங்கே வீடுகளில் கிடைக்கும் ஆகாரங்களைத் தின்று தொந்தரவு செய்யும். தோட்டங்களிலுள்ள கறிகாய்கள், பழங்கள் இவற்றைத் தின்று நாசப்படுத்தும்; தென்ன மரங்களில் ஏறி இளங்காய்களைப் பறித்துக் குடைந்து இளநீரைக் குடித்து, வழுக்கையைத் தின்று அழிக்கும்.

குரங்குகளின் உடலிலே உள்ளங்கை, உள்ளங்கால், முகம் இவை தவிர, மற்ற இடங்களிலெல்லாம் மயிர் அடர்ந்திருக்கும். குரங்குகளின் தலை உருண்டையானது. சில குரங்குகளுக்குத் தலை

நாய்க்கலைபோல இருக்கும். அவற்றை நாய்க் குரங்குகள் என்பார்கள். பற்கள் மிக்க கூர்மையாயும் நீளமாயும் வலிமையாயு மிருக்கும். மனிதர்களுக்கு இருப்பதுபோலக் குரங்குகளுக்கும் முப்பத்திரண்டு



பற்கள் உண்டு. மூக்குச் சப்பையாகவும், கண் கள் குழிவிழுந்தும் இருக்கும். ஒவ்வொரு காலி லும் ஐந்து விரல்கள் இருக்கும். கட்டைவிரல்கள்

குட்டையானவை. மற்ற விரல்கள் நீண்டு மனிதர் களின் விரல்களைப்போல நீட்டி மடக்கக்கூடியவை கள். எந்தப்பொருளையும் விரல்களால் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு விரலிலும் ஒரு தட்டையான நகமுண்டு. குரங்குகள் பயமில்லா மல் மரங்களில் தாவிக் குதிக்கும். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குத் தாவுங் காலங்களிலும் குரங்குக் குட்டிகள் தாய்க்குரங்கின் வயிற்றில் விடாமல் பற் றிக்கொண்டிருக்கும். குரங்குகள் நான்கு கால்களா லும் கூனிக்கொண்டு நடக்கும்.

நீளவால்குரங்குகள், குட்டைவால்குரங்குகள், வாலில்லாக்குரங்குகள் என்று குரங்குகளில் மூன்று வகைகள் உண்டு. நீளவால்குரங்குகள் இந்தியா விலும் அமெரிக்காவிலும் அதிகமாக இருக்கின்றன. இவை மரக்கிளைகளில் வால்களைச் சுற்றிக்கொண்டு தலைகீழாக ஊஞ்சலாடும். வாலில்லாக் குரங்குகளை மனிதக் குரங்குகள் என்று சொல்லுவார்கள். ஒரு வகைப் பெரிய கருங்குரங்குகளுக்குக் கொண்டை முசுறுகள் என்று பெயர்.

இந்தியாவில் வாலுள்ள குரங்குகளில் சில கருநிறமானவை. அவைகளுக்குக் கருங்குரங்குக ளென்று பெயர்.

குரங்குகள் பார்த்ததைச் செய்யும் இயல் புள்ளவை. குறவர் முதலியவர்கள் குரங்குகளைப் பழக்கி வேடிக்கைகள் காண்பித்து அவற்றின் உதவியால், தங்கள் ஜீவனத்தைத் தேடிக்கொள்ளு

கிறார்கள். குரங்குகளை வீடுகளில் வளர்ப்பதும் உண்டு.

இறைச்சி முசுறு இயல்பு

பயிற்சி :—1. நாய்க்குரங்கு, கருங்குரங்கு எனப் பெயர் அமைந்த காரணம் என்ன? 2. குரங்கின் தேக அமைப்பு எந்த எந்த விதத்தில் மனிதனை ஒத்திருக்கின்றது? 3. குரங்குகளால் மனிதருக்கு உண்டாகும் நன்மைதீமைகள் யாவை?

4. புதையல்

மனிதர்கள் தாங்கள் பாடுபட்டுத் தேடின பொருள்களில், உண்பதற்கும் மற்றச் செலவுகளுக்கும் போக மீதியாய் இருப்பதைப் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். அப்படி வைத்திருந்தால் அது தங்களுக்குச் சமயத்தில் உதவும். ஆனதால், முற்காலத்து மனிதர்கள் அப்பொருளைத் தங்கள் பூமியில் புதைத்து வைத்துவந்தார்கள். அதற்குப் புதையல் என்று பெயர். தற்காலத்தில் பணத்தைப்பாதுகாக்கப் பலவழிகள் இருப்பதால், அதைப் புதைத்து வைப்பது பேதைமையே ஆகும்.

இப்புதையலைப்பற்றி வழங்கும் ஒரு சிறு கதை உண்டு. அது வருமாறு :—

ஓர் ஊரில் ஒரு வேளாளன் பணக்காரனாக இருந்தான். அவன் தனக்கு மீதியான பணங்களை, நிலம் வாங்குவதிலும், கால்நடை வாங்குவதிலும், மராமத்துச் செய்வதிலும், வாணிபத்திலும் செலவிட்டு மிக்க ஊதியம் அடைந்து வந்தான்.

'இவ்வளவு வருமானம் உடைய இவன் தன் பணத்தைப் புதைத்துவைத்திருப்பான்' என்றே அவ்வூரில் வதந்தி உலாவிற்று. அவன் குடும்பத் தினரும் அவ்வாறே கருதியிருந்தனர்.

ஒரு நாள் அவனுக்குத் திடீரென்று மயக்கம் கண்டு, இறக்கும் தறுவாயிலிருந்தான். கபம் தொண் டையைக் கட்டிக்கொண்டதனால், அவனால் பேச முடியவில்லை. என்றாலும், மற்ற ஞாபகம் எல்லாம் அப்போது அவனுக்கு இருந்தது.

அந்தச் சமயத்தில், அவனுடைய பிள்ளைகள் அவனைச் சூழ்ந்துகொண்டு புலம்பினர். சில முதி யோர், அங்கு வந்து அவனைப் பார்த்து, "அப்பா; இவர்களையெல்லாம் தவிக்கவிட்டுப் போகிறாயே; இத்தனை நாள் தேடிய பொருளை எல்லாம் நீ எங்கே புதைத்து வைத்திருக்கிறாய்?" என்று கேட்டனர்.

அவன் அருகிலிருந்த தன் நிலத்தைச் சுட்டிக் காட்டி அங்குப் புதைத்து வைத்திருப்பதாகக் கை யாற் சாடை காட்டினான். சற்று நேரத்திற்கெல் லாம் அவன் இறந்துவிட்டான்.

சில நாட்கள் சென்றபின், அவனுடைய பிள்ளை கள் தங்கள் நிலத்தில் ஓரிடத்தில் சிறிதுதூரம் தோண்டிப்பார்த்தனர். அங்குப் புதையல் கிடைக்க வில்லை. 'தந்தை பொய் சொல்லியிருப்பாரா? இன்னும் மற்ற இடங்களையும் சோதிப்போம்' என்று அவர்கள் நிலமெங்கும் ஆழமாகத் தோண்டிப் பார்த் தனர். அங்கும் புதையல் காணப்படவில்லை. புதை

யல் இருந்தால்தானே கிடைக்கும்? பின்பு, அவர்கள், 'புதையலைப் பூதங்காத்துக்கொண்டது. அதனால்தான் அது நமது கண்ணுக்கு மறைந்து விட்டது' என்று அம்முயற்சி ஒழிந்து, பழையபடி, தங்கள் உழவுத்தொழிலைச் செய்துவந்தனர்.

அவ்வருடம் விளைந்த தானியங்கள் அறுவடையாகி மாசூலைக் கணக்கிட்டபோது, முன் வருடங்களை விடப் பதின்மடங்கு அதிகம் கண்டுமுதல் கிடைத்திருப்பதை அறிந்து, அவர்கள் அதிக வியப்புற்றனர். "நமது தந்தையார் சொல்லியதில் பொய் ஒன்றுமில்லை. முழுவதும் நிஜமே. நிலத்தை ஆழமாக உழுது பயிர் செய்துவந்தால் அதுவே நமக்குப் பெரிய புதையல் என்பதை அவர் தெரிவித்திருக்கிறார்" என்று உணர்ந்து, அது முதல் அவர்கள் அவ்வாறே உழவுத்தொழில்செய்து, மிக்க ஊதியம் பெற்று வாழ்ந்து வந்தனர்.


"அகல உழுவதினும் ஆழ உழு"
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"
"மேழிச் செல்வம் கோழைபடாது"

அறுவடை பேதைமை ஊதியம்

பயிற்சி:—1. முற்காலத்தில் பணத்தை எப்படிக் காப்பாற்றி வந்தனர்? 2. இக்காலத்தில் மிஞ்சிய பணத்தை என் புதைத்து வைக்கிறதில்லை? 3. வேளாளன் இறக்குந் தறுவாயில் தன் நிலத்தைச் சுட்டிக்காட்டியதின் நோக்கம் என்ன? 4. வேளாளனுடைய பிள்ளைகள் முடிவில் தெரிந்து கொண்ட உண்மையென்ன?

5. சவுக்காரம்

வெகுகாலமாக இந்தியாவிலுள்ள ஜனங்கள் தங்களுடைய தேகத்தையும் உடைகளையும் பலவிதமாகச் சுத்தம் செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் தினம் தண்ணீரில் அழுக்குத் தேய்த்துக் குளித்துத் தலைமுழுகுகிறார்கள். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது அரைப்பு அல்லது சீயக்காயை அரைத்துத் தேய்த்துக் குளிக்கிறார்கள். ஆடைகளைத் தினம் துவைத்து உடுக்கிறார்கள். அழுக்கு வஸ்திரங்களைச் சலவை செய்ய வண்ணானிடம் கொடுக்கிறார்கள். அவன் அத்துணிகளை உவர்மண் கலந்த தண்ணீரில் நனைத்துக் கல்லில் அடித்துத் துவைத்துச் சுத்தம் செய்கிறான். நாகரிகம் முதிர்ந்த இக்காலத்தில், நம்மவர்கள், தேகத்திலுள்ள அழுக்கையும் உடைகளிலுள்ள அசுத்தத்தையும் போக்கச் சவுக்காரம் என்பதை உபயோகிக்கிறார்கள். 'சவர்க்காரம்' என்பது சவுக்காரம் என்று வழங்குகிறது. இதனைச் சோப்பு என்றே பெரும்பாலார் சொல்லுகின்றனர்.



இந்தியாவில் இந்நாளில் சோப்பு இன்னதென்பது தெரியாதவர் ஒருவருமே இரார். இப்பொழுது நம் வீடுகளில் உபயோகிக்கும் பல உபயோகப் பொருள்களில் சோப்பும் ஒன்றாக இருந்துவருகிறது.

சவுக்காரத்தில், துணிவெளுக்க உபயோகமாவது ஒருவகை; உடம்பு தேய்த்துக்கொள்ள உபயோகமாவது மற்றொருவகை. பின் சொன்ன வகையில் பல நிறமுள்ளவையும் பல மணமுள்ளவையும் உண்டு.

சவுக்காரம் செய்யச் சேர்க்கும் பொருள்கள் கொழுப்பு, எண்ணெய், காரம் ஆகிய மூன்றாகும். எண்ணெயில் தேங்காயெண்ணெய் அல்லது நிலக்கடலை யெண்ணெய் சேர்க்கப்படும். காரமென்பது சோடா என்ற உவர்மண்ணாகும். பொடாஷ் என்றாவும் காரமாகும். சவுக்காரம் நூறுபங்காலில் அதில் கொழுப்பு அறுபத்துமூன்று பங்கும், காரம் ஏழு பங்கும், எண்ணெய் முப்பது பங்கும் இருக்கும்.

சரியான அளவுப்படி எண்ணெயையும் கொழுப்பையும் கலந்து அதை ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். கொழுப்பு உருகி எண்ணெயுடன் சேர்ந்து கொதிக்க ஆரம்பித்தவுடன், சோடா உப்பைத் தண்ணீரில் கரைத்துக்கொண்டு அதில் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துக் கொதிக்கும் எண்ணெயில் ஊற்றுவார்கள். எல்லாம் சேர்ந்து நன்றாகக் கொதித்தபின், மேலே சொன்ன காரங் கலந்த தண்ணீரில் கொஞ்சம் அதிகமாக எடுத்து அதில் தெளிப்பார்கள். அப்போது சவுக்காரம் அடியில் கட்டியாக உறைந்து நிற்கும். அதனை மறுபடியும் தண்ணீரில் கரைத்துக் காய்ச்சுவார்கள். காயும்போது சோடாக் காரங் கலந்த தண்ணீரை மறுபடியும் சேர்த்துக் காய்ச்ச, அது சுத்தமாகும்.

இப்படிப் பல தடவைகள் செய்து, கடைசியாகக் காய்ச்சிக் கீழே இறக்கும் சமயத்தில் வேண்டிய நிறங் களையும் வாசனைச் சாமான்களையும் சேர்ப்பார்கள். பிறகு, கீழே இறக்கி அச்சுக்களில் ஊற்றி ஆறவைப் பார்கள். இறுகினவுடன், வேண்டிய முத்திரைகளைப் போடுவார்கள். சோப்பின் பெயர், தயாரிக்கும் ஊர் முதலியவைகள் அச்சிடப்பட்ட அழகிய காகிதங் களில் வைத்து மடித்துக் காகிதப் பெட்டிகளில் அடக்கம்செய்து விற்பனைக்கு அனுப்புவார்கள்.

ஐரோப்பாக் கண்டத்தில் எல்லா நாடுகளிலும் சவுக்காரம் செய்யப்படுகிறது. இப்போது இந்தி யாவிலும் தஞ்சாவூர், கள்ளிக்கோட்டை, மைசூர், கல்கத்தா முதலிய பல இடங்களில் பலவிதச் சவுக் காரங்கள் விசேஷமாகத் தயாராகின்றன. ஆயினும், இத்தேசத்து ஜனங்களின் தேவைக்கு வேண்டிய அளவு இன்னும் கிடைக்கவில்லை. ஆகையால், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் முதலிய தேசங் களிலிருந்தே சோப்புக்கள் வருஷந்தோறும் ஏராள மாக இறக்குமதியாகின்றன. சில பெரிய கலாசாலை களில் சோப்புத் தயாரிக்கும் விதம் ஒரு கைத்தொழி லாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

அரைப்பு	உவர்மண்	மணம்
கொழுப்பு	கலாசாலை	இறக்குமதி

பயிற்சி :—1. முற்காலத்தில் உடம்பிலுள்ள அழுக்கை எவ்வாறு சுத்தம் செய்து வந்தனர்? 2. சோப்பில் என் னென்ன பொருள்கள் கலந்துள்ளன? 3. சோப்பின் சில வகைகளைக் கூறி அவற்றின் உபயோகங்களையும் விளக்குக.


6. ஒரு நரியின் தந்திரம்

ஒரு நரி தற்செயலாய் ஒரு கிணற்றில் தவறி விழுந்துவிட்டது. நரி மிக்க தந்திரசாலியல்லவா? அது எப்படி மேலே ஏறி வந்தது என்பதைக் கேளுங்கள்.

ஒரு கிணற்றில் ஓர் இராட்டினம் இருந்தது. அதில் தண்ணீர் இறைப்பதற்காக ஒரு கயிற்றில் ஒவ்வொரு நுனியிலும் ஒவ்வொரு தொட்டி கட்டியிருந்தது. ஒரு தொட்டி கிணற்றுக்குள் தண்ணீர் மொள்ளும்போது மற்றொன்று மேலே இருக்கும். கிணற்றுக்குள் போயிருக்கும் தொட்டியில் தண்ணீரை நிரப்பித் தோட்டக்காரன் கயிற்றை இழுப்பான். மேலே இருக்கும் தொட்டி கீழே போகும். தண்ணீருள்ள தொட்டி மேலே வரும். அந்த நீரைத் தோட்டக்காரன் தோட்டத்திற்குப் பாய்ச்சுவான். இப்படியாக, ஒரு தொட்டி மேலே வருவதும் மற்றொன்று கிணற்றுக்குள் போவதுமாயிருக்கும். இப்படித் தோட்டத்தில் தண்ணீர் இறைப்பது வழக்கம்.

ஒரு நாள் கிணற்றில் ஊறிய நீர் இறைத்தாகிவிட்டது. மறுபடியும் தண்ணீர் ஊறச் சில நேரம் காத்திருக்கவேண்டியிருந்தது. ஆகையால், தோட்டக்காரன் சிறிது நேரம் வெளியே போயிருந்தான். தோட்டக்காரன் இல்லாத சமயத்தில் தற்செயலாய் நரி யொன்று அங்கே வந்தது. மேலே வந்திருந்த தொட்டியில் தண்ணீர் கொஞ்சம் இருந்தது. அதைக்

குடிக்க நரி தொட்டிக்குள் இறங்கிற்று. அதன் பளுவினால் அந்தத் தொட்டி கிணற்றுக்குள் போய் நின்றுவிட்டது. நரியும் தொட்டியுடன் கீழே போய்விட்டது. அப்போது கிணற்றுக்குள்ளிருந்த தொட்டி மேலே வந்தது. நரி மேலே வரப் பல விதத்திலும் முயன்றது. ஆனால், வழி எதுவும்



தெரியவில்லை. ஆகையால், விசனத்தினால் அது மிக உரக்க ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் குரலைக் கேட்டதும், அங்கே ஓர் ஓநாய் வந்தது. அது கிணற்றுக்குள்ளிருந்த நரியைப் பார்த்து, "ஐயோ! உனக்கு என்ன ஆபத்து வந்து விட்டது? நீ எப்படிப் பிழைப்பாய்?" என்று இரங்கிக் கேட்டது. நரி, "அண்ணே! எனக்கு

ஆபத்து ஒன்றும் இல்லை. நான் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள வந்தேன். ஆ, ஆ! இந்த நீர் என்ன ருசியாயிருக்கிறது! குடிக்க வந்த இடத்தில் எனக்கு என்ன லாபம் தெரியுமா! என்னால் கூடுமான வரையில் இந்தத் தொட்டியில் உணவையும் நிரப்பி விட்டேன். இது எனக்குப் போதும். என் ஆயுள் காலம் முழுவதும் எனக்கு உணவு விசாரம் இல்லை. கஷ்டப்படாமல் நான் இனிமேல் என் வாழ்நாட் களைச் சுகமாகக் கழிக்கலாம்'' என்றது. அதைக் கேட்ட ஓநாய், ''ஓ! ஓ! நீ கிணற்றில் தவறிவிழுந்து விட்டாய் என்றல்லவா நினைத்தேன்; அங்கே ஆகாரமுமா இருக்கிறது?'' என்றது. நரி, ''வேண் டியது! இங்கிருப்பது அவ்வளவும் எனக்கு எதற்கு? நாமிருவரும் உறவினர் அல்லவா? உனக்கும் இதில் பங்கு உண்டு. எனக்குக் கிடைத்ததிலும் உனக்குப் பாதி தருகிறேன். அப்பொழுதுதான் நான் திருப்தி அடைவேன். அதனால் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சீக்கிரம் அதோ அந்தத் தொட்டியில் உட்காரு'' என்று சொல்லி மேலே இருந்த தொட்டியைக் காண்பித்தது. ஓநாய், நரி யின் வார்த்தையை மெய்யென்று நம்பி, பெரிய லாபம் கிடைக்குமென்று நினைத்து, அந்தத்தொட்டி யில் குதித்தது.

நரியைக் காட்டிலும் ஓநாய் அதிகக் கனமாயிருந் தது. ஓநாய் தொட்டியிற் குதித்ததும், தொட்டி விரைவாகக் கிணற்றினுள் இறங்கிற்று. நரி இருந்த தொட்டி மேலே வந்தது. உடனே, நரி ஒரே

பாய்ச்சலாய்ப் பாய்ந்து கரையை அடைந்தது. "அண்ணே! உனக்கு மிகவும் வந்தனம். உன் உதவியை மறக்கமாட்டேன். கிணற்றுக்குள் இருக்கும் திரவியம் எல்லாம் உனக்கே இருக்கட்டும். அதோ தோட்டக்காரன் வந்து விட்டான். நான் போகிறேன். மிக்க வந்தனம்" என்று சொல்லிவிட்டு நரி ஓடிப்போய்விட்டது.

தந்திரசாலிகள் சமயத்துக்குத் தக்கபடி பேசிப் பிறரை ஏமாற்றி விடுவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வார்த்தைகளைச் சடுதியில் நம்பக்கூடாது.

பஞ்ச விசாரம் திரவியம்

பயிற்சி :—1. ஓநாய்க்கும் நரிக்கும் நடந்த சம்பாஷணை யாது? 2. தண்ணீர் இறைக்க இக்காலத்தில் உபயோகப் படும் பலவித முறைகள் யாவை? ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாய் எழுதுக. 3. இரை—இறை; கரை—கறை இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக. 4. நரியும் ஆடும், காக்கையும் நரியும் என்ற கதைகளைச் சுருக்கி எழுதுக.

7. வேப்பமரம்

சாலையோரங்களில் நடந்து செல்லும் வழிப் போக்கர்களுக்கு நிழல் தருவதற்காக வேப்பமரங்களையும் வைத்து வளர்க்கிறார்கள். அவை பார்க்க மிக அழகாக இருக்கும். இம்மரங்கள், இந்தியாவில் மாத்திரந்தான் காணப்படுகின்றன. இந்தியாவிலும் காடுகளில் இவை அதிகமாக வளர்வதில்லை.

'வேம்புக்குத் தோப்பில்லை' என்பது ஒரு பழமொழி.

வேப்பமரம் சாதாரணமாக முப்பது அடி உயரம் வளரும். இதன் வேர்கள் பூமிக்குள் சென்று கிளைத்து நாலாபக்கங்களிலும் பரவி, மரத்தைக் கீழேவிழாமல் பிடித்துக்கொண்டிருக்கும். இம்மரத்தின்வேரில் ஒரு விசேஷசக்தி உண்டு. உயிருள்ள ஒரு மரத்தின் பெருவேர் ஒன்றை நடுவில் வெட்டிவிட்டால், அவ்வெட்டுவாயிலிருந்து புதிய துளிர்கள் தோன்றி வளரும்.

இது மூன்று அல்லது நான்கு அடிச் சுற்றளவுள்ளதாக இருக்கும். சில மரங்கள் சுமார் இருபது அடிச் சுற்றளவு உள்ளவையாகவும் இருப்பது உண்டு. இம்மரங்கள் பல வருஷங்கள் வரையில் நிலைத்திருக்கும்.

அடிமரத்தின் மேற்பட்டை கரடுமுரடாகவும் வெடித்தும் இருக்கும். வெடித்த பட்டைகள் நாள்பட்டால் உலர்ந்து பெயர்ந்து உதிரும். பச்சைப் பட்டையைக் காயப்படுத்தினால் அந்த வாயிலிருந்து பிசின் வடியும்.

அடிமரத்திலிருந்து கிளைகள் நாலாபக்கங்களிலும் பரவியிருக்கும். திரும்ப, இவை சிறு சிறு கிளைகளாகப் பிரிந்திருக்கும். இச்சிறுகிளைகளில் பசுமையான இலைகள் நிறைந்திருக்கும். பட்சிகளின் இறகு போல நடு நரம்பின் இருபக்கங்களிலும் சிற்றிலைகள் உண்டு. இவை நரம்பின் இருபக்கங்களிலும் எதிரெதிராகச் சேர்ந்திருக்கும். நுனியில்

தனியாக ஒரு சிற்றிலை இருக்கும். இலையின் விளிம்புகள் நேராக இரா. ரம்பத்தின் வாய் போல இவை பிளவுபட்டு இருக்கும். பக்கத்துக்குப் பக்கம் சாய்ந்த பல்வெட்டுக்களுள்ளவைகளாகவும் ஏற்றத்தாழ்ச்சியாகவுமிருக்கும். இலைக் கொழுந்துகள் சிவப்பு நிறமானவை. முற்றின பிறகு இவை பசுமை நிறமாக மாறும். இலையைத் தின்ரூல் கசக்கும். ஒட்டகங்கள் வேப்பிலையை மிக விரும்பித் தின்னும்.

இலைக்காம்புகளின் கணுச்சந்துகளிலிருந்து புஷ்பங்கள் கொத்துக்கொத்தாகப் பூத்திருக்கும். ஒவ்வொரு கொத்திலும் அடியில் மலர்ந்த பூக்களும் நுனியில் அரும்புகளும் நிறைந்திருக்கும். இம்மரம் பங்குனி மாதத் தொடக்கத்தில் பூக்க ஆரம்பிக்கும். இந்தியர்களிற் பலர், தங்கள் தங்கள் புது வருஷப் பிறப்புப் பண்டிகையின்போது வேப்பம் பூவை உணவுப்பொருளாக உபயோகிக்கிறார்கள்.

புஷ்பங்கள் மிகச் சிறியவை; வெண்ணிறமானவை; நல்ல வாசனையுள்ளவை. ஒவ்வொரு பூவிலும் ஐந்து இதழ்கள் உண்டு.

சில மரங்களைப்போல வேப்பமரம் வருஷம் முழுதும் பூத்துக்கொண்டிருப்பதில்லை. பூக்கத் தொடங்கிக் கொஞ்சகாலமான பிறகு, புஷ்பங்கள் உதிர்ந்து, பிஞ்சுவிட்டுக் காய்க்க ஆரம்பிக்கும்.

காய்கள் பச்சைநிறமாயிருக்கும். இவை பழுத்தால் மஞ்சள்நிறமாக மாறும். பசுங்காய்களின் மேல்தோலைக் கிள்ளினால் வெண்ணிறமான பால்



வடியும். பழங்களில் இந்தப் பால் வற்றிவிடும். பழங்கள் நன்றாகப் பழுத்தபிறகு ஒவ்வொன்றாக உதிரும்.

அனேக கிராமங்களில் சாவடிகளிலும் கோயில் களுக் கெதிரிலும் மற்றப் பொது இடங்களிலும் இம்மரங்களைப் பயிராக்குகிறார்கள். இம்மரங்களின் நிழலில் கிராமத்தார்கள் பொதுக்கூட்டங்கள் கூடுவது வழக்கம்.

இந்தியாவில் வெகுகாலமாக வேப்பமரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் மருந்தாக உபயோகித்து வந்திருக்கிறார்கள். வேப்பங்காற்றும் நிழலும் தேகத்திற்கு ஆரோக்கியத்தைத்தரும்.

வேப்பம் பட்டையை நசுக்கிக் கஷாயம் செய்து மலேரியா ஜ்வரத்திற்கு மருந்தாகக் கொடுப்பதும் உண்டு.

பிரசவித்த வீடுகளிலும் அம்மை வார்த்த வீடு களிலும் உள்ளே ஒருவரும் வராதபடி எச்சரிக்கை யாக வாசலில் வேப்பிலையைக் கொத்தாகக் கட்டியோ செருகியோ வைப்பது வழக்கம். அம்மை வார்த்த புண்களுக்கு வேப்பிலையை அரைத்துப் போடப் புண்கள் சீக்கிரம் ஆறிவிடும். பூக்களைக் காயவைத்து ரஸம், பச்சடி முதலிய உணவுப் பதார்த்தங்களாக உபயோகிக்கிறார்கள். பழங் களைக் காக்கைகள் பிரியமாகத் தின்னும். இதுபற் றியே, 'வேம்பன்றே காக்கை விரும்பும் கனி' என்றார் பெரியார். கொட்டைகளைக் காயவைத்து, செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பார்கள். இது பலவியாதிகளுக்கு நல்ல மருந்தாகும். காய்ந்த மரத்தைக் கறையான்கள் அரிப்பதில்லை. ஆகை

யால், இது வீடுகட்ட உதவும். இளங்குச்சிகளால் பல் துலக்கலாம். வேர்களிலிருந்து ஒருவிதமான திரவத்தை இறக்கி, அதனைக் குஷ்டம் க்ஷயம் முதலான கடுநோய்களுக்குக் கொடுக்கலாம்.

'வேம்பு விரும்பக் கரும்பாகும்'

பிசின்	சிற்றிலை	கணுச்சந்து
அரும்பு	பசுங்காய்	கஷாயம்
மலேரியா	கறையான்	திரவம்

பயிற்சி:—1. வேப்பிலை, வேப்பம்பூ இவற்றின் அமைப்பு, குணம் முதலியவற்றைத் தெரிந்தவரையில் எழுதுக. 2. வேம்பு ஆரோக்கியத்திற்கு எப்படி எப்படி உதவுகிறது?

8. புத்திமான் பலவானுவான்

ஒரு காட்டில் சதுரதந்தன் என்னும் அரச யானை பல யானைகளுட்ன் வசித்துவந்தது. ஒரு சமயம் மழையில்லாமையால், அக்காட்டிலுள்ள ஆறு, ஏரி, குளம், குட்டை முதலிய நீர்நிலைகளெல்லாம் வற்றிப்போயின.

யானைகள், நீரில் இறங்கிக் குளித்து விளையாடுவதில் அதிகப் பிரியமுள்ளவை. குளிப்பதற்கும் குடிப்பதற்கும் தண்ணீரில்லாமையை அறிந்த யானைகள், வேறு தண்ணீர் நிறைந்த இடத்திற்குப் போக விருப்பங் கொண்டன; தங்களது விருப்பத்தை அரச யானையிடம் தெரிவித்தன. அரச யானையும் வெகுதூரத்திலுள்ள மற்றொரு காட்டிற்கு அவைகளை அழைத்துச் சென்றது.


அந்தக் காட்டிலே தண்ணீர் நிரம்பிய பல தடாகங்கள் இருந்தன. யானைகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒரு பெரிய தடாகத்தில் இறங்கி ஜலக்கிரீடை செய்தன. பின்பு, மாலையில் காட்டினுள் புகுந்து இலை தழைகளைத் தின்ன ஆரம்பித்தன. அது முதல், தினந்தோறும் அந்த யானைகள் காலையில் அங்குவந்து ஜலக்கிரீடை செய்வதும் மாலையில் போய்விடுவதும் வழக்கமாயின.

இப்படியிருக்கையில், அந்தத் தடாகத்தின் கரையில் வசித்துவந்த முயல்களில் பல, யானைகளின் கால்களால் மிதியுண்டு மாண்டன. சிலவற்றிற்குக் கால்கள் ஒடிந்தன. இவற்றால் வருந்திய முயல்கள், ஒன்றுகூடி, "எப்படி இந்தத் துன்பத்தினின்றும் நீங்கலாம்? இதைத் தவிர நமக்கு வேறு நீர் நிலை இல்லை. யானைக்கூட்டம் இப்படியே தினமும் நமக்குச் சங்கடம் விளைவிக்கும். யானை தொடுதலும், பாம்பு முகர்தலும், அரசன் நகைத்தலும், தூர்ச்சனன் மரியாதை பண்ணுதலும் உயிர்க்கேட்டிற்குக் காரணங்களாகும். ஆதலின், இத்தொல்லையினின்றும் தப்ப முயலவேண்டும்" என்று ஆலோசனை செய்தன.

அப்பொழுது நீள்செவியன் என்னும் புத்திசாலியான ஒரு கிழ முயல், மற்ற முயல்களைப் பார்த்து, "நண்பர்களே! உபாயத்தால் ஆகாதது ஒன்றுமில்லை. யானைகள் நம்மைக்காட்டிலும் பல மடங்கு வலி மிக்கவை. அவைகளை நம்மால் எதிர்த்து

வெல்லமுடியாது; உபாயத்தினாலேயே வெல்லவேண்டும். நான் சொல்லுகிறதைக் கேளுங்கள்" என்று ஓர் உபாயத்தைக் கூறியது.

மறுநாள், பெரிய உருவமுடைய நீள்செவியன் என்னும் அந்த முயல், யானைகள் வரும் வழிக்கு அருகிலுள்ள ஒரு மேட்டில் உட்கார்ந்துகொண்டது; யானைகள் வரும்பொழுது, யானை அரசைப் பார்த்து,



"ஐயா, எங்களுடைய கடவுள் சந்திரமண்டலத்தில் இருக்கிறார். அவர், நாள்தோறும் இராக்காலத்தில் இந்தக் குளத்திற்கு வந்து ஜலக்கிரீடை செய்வது வழக்கம். நீங்கள் பகற்காலத்தில் ஜலக்கிரீடை செய்து தடாகத்தைக் கலக்கிச் சேறாக்கிவிடுவதைக் கண்டு, அவர் மிகுந்த கோபங்கொண்டிருக்கிறார்.

இனிமேல், இந்தக் குளத்தில் இறங்கிக் கலக்குவீர்க ளானால் நீங்கள் எல்லாரும் இறந்துவிடுவீர்கள்'' என்று உரக்கக் கூறிற்று.

அதைக் கேட்ட யானை அரசு, ''நீ கூறுவது உண்மையாயின், நான் உங்களுடைய கடவுளைப் பார்த்து வணங்கிச்செல்ல விரும்புகிறேன்'' என்று சொல்லிற்று.

நீள்செவியன், ''இன்றிரவு நீர் தனியாய் என்னோடுவாரும்; எங்கள் கடவுளைக் காட்டுவேன்'' என்றது. அதற்கு யானை அரசு, ''நீ கூறியபடி காட்டாவிட்டால், நான் உங்களெல்லாரையும் கொன்று விடுவேன்'' என்று கோபத்துடன் சொல்லிற்று. நீள்செவியனும் அதற்குச் சம்மதித்தது.

யானைஅரசு அன்று இரவு நீள்செவியனுடன் தனியே குளக்கரைக்குப் போயிற்று. நீள்செவியன் யானைஅரசைப் பார்த்து, ''ஐயா! கலக்காமல் கரையிலிருந்து ஜலத்தை உற்றுப்பாரும். எங்களுடைய கடவுளின் உருவம் தண்ணீரில் நன்றாகத் தெரியும்'' என்றது. யானைஅரசு அதை நம்பி, அவ்வாறே, ஜலத்தில் பார்க்க, அங்கே சந்திரபிம்பத்தைக் கண்டது. உடனே, அது மிகவும் பயந்து நமஸ்காரம் பண்ணிவிட்டு விரைந்து சென்றது. மற்ற யானைகளும் அதனைப் பின்பற்றி வேறொரு காட்டை அடைந்தன. அன்று முதல் முயல்களெல்லாம் துன்பமற்று இன்பமுற்று வாழ்ந்தன.

தம்மைக் காட்டிலும் பலமுள்ளவர்களை அவர்

கள் நம்பத்தக்க உபாயங்களால் வெல்லவேண்டு மென்பது இக்கதையால் தெளிவாகின்றது.

தடாகம்	ஜலக்கிரீடை	மண்டலம்
பிம்பம்	ஆலோசனை	செவி

பயிற்சி :—1. யானைகளின் இயற்கை, அறிவு இவற்றைப்பற்றி என்ன தெரிந்துகொள்ளுகிறோம்? 2. நீள் செவியன் செய்த தந்திரம் யாது? 3. மூயலின் செய்கையால் விளங்கும் நீதி யாது?

9. பறங்கி

மரம், செடி, கொடி இவற்றுக்குத் தாவரம் என்று பெயர். இவற்றுள் பறங்கி, கொடியாக வளரக்கூடியது. இதுவும் பூசனி, வெள்ளரி, கக்கரி, பாகல், புடல், அவரை, பட்டாணி முதலியவைகளும் மனிதர்களுக்கு ஆகாரமாகக் கூடியவை.

பறங்கி உஷ்ணமான நாடுகளில் செழிப்பாகப் பயிராகிறது. ஏனெனில், இதற்கு நல்ல உஷ்ணமும் அதிக ஈரமும் வேண்டும். இது மழையும் வெயிலும் அதிகமாக உள்ள உஷ்ணமான நாடுகளிலே தான் வேண்டிய அளவு தட்டின்றிக் கிடைக்கும்.

பறங்கியைப் பயிரிடுவதற்கு மேட்டுப்பாங்கான பூமியே ஏற்றது. ஆயினும், இதை மனைக்கொல்லைகளிலுள்ள காய்கறித் தோட்டங்களிலும் பயிரிடுவது நம்நாட்டில் வழக்கமாயிருக்கிறது. கோடைக்காலத்தில் நன்செய்நிலங்களிலும் இதைப் பயிரிடுவதுண்டு.

எந்தப் பயிரும் பயிரிடுபவனது முயற்சிக்கும் உழைப்புக்கும் தக்க அளவு பயன் தரும். ஆகையால்,

இப்பறங்கி பயிரிடப்படும் நிலத்தை நன்ருய்க் கொத்தி நல்ல எருவிடவேண்டும். பிறகு, சுமார் பன்னிரண்டடிக்கு ஒன்ருகப் பல குழிகள் தோண்ட வேண்டும். இவை இரண்டடி ஆழம் இருக்கலாம். இக்குழிகளைச் சுமார் பதினைந்து அல்லது இருபது நாட்கள் வரையில் காற்றும் வெயிலும் படும்படி விட்டுவைக்க வேண்டும். இவற்றை மண்ணும் எரு வும் கலந்து தூர்த்துச் சில பறங்கி விதைகளை ஒவ் வொரு குழியிலும் மூன்று அங்குல ஆழத்தில் நட்டுத் தண்ணீர் ஊற்றி வரவேண்டும். இவற்றின் கொடி கள் இவ்விதைகளிலிருந்தே பயிராகின்றன.

பறங்கி, வீட்டுக் கூரைகளிலும் தரையிலும் பட ரும். இதன் வேர் அதிக ஆழம் செல்லுவதில்லை. ஆகையால், இதற்கு வேண்டிய உணவு மேற்பரப் பிலிருந்து பூமிக்குள் கொஞ்சதூரத்தில் இருக்க வேண்டும். இதை அவரை, புடல் முதலியவைகளைப் போல் பந்தல்களில் படரவிடுவதில்லை. ஏனென்ருல், இதன் கொடிகள் உள்ளே துளையாயிருக்கும்; உறுதி யானவை அல்ல. இதன் காய்கள் பருமனானவை. அவற்றின் கனத்தைத் தாங்குவதற்கு இக்கொடி களுக்குச் சக்தி இல்லை.

இதன் கொடி ஐந்து பட்டைகளுள்ளது. மேற் புறம் உறுதியான நாருள்ளதாயிருக்கும். இதன் கொடியில் பல கணுக்கள் தோன்றும். இக்கணுக் களிலேதான் நீண்ட காம்புகளுள்ள இலைகள் கணுவுக்கொன்ருகத் தோன்றும். இவை விரிந்து ஐந்து மடல்கள் உள்ளவைகளாக இருக்கும்.

இக்கொடியின் தண்டு, இலை, பூ, பிஞ்சு ஆகிய எல்லாம் சுணை உள்ளவை. பூச்சி புழுக்களாலும், கால் நடைகளாலும் இவை நாசமடையாமல் இருப் பதற்கே இவ்விதச் சுணையைக் கடவுள் இவற்றுக்கு உண்டாக்கியிருக்கிறார்போலும்! இச்சுணை சில சமயங்களில் முட்களைப்போல் குத்திவிடும்.

பறங்கிக் கொடியின் கணுக்களில் பற்றுக்கம்பி கள் தோன்றிப் பக்கங்களிலுள்ள செடிகளையும், கல் மண் முதலியவற்றையும் கெட்டியாகப் பிடித் துக்கொள்ளும். இப்பற்றுக் கம்பிகள் தாவரங் களின் வேர்களைப்போலப் பூமிக்குள் சென்று மண்ணை உறுதியாகப் பிடித்துக்கொள்வதும் உண்டு. இவைகள் வேர்கள்போலக் காணப்பட் டாலும் பூமியிலுள்ள ஆகாரத்தை இக்கொடிகளுக்கு இழுத்துக்கொடுக்க இவைகளால் முடியாது. இப் பற்றுக் கம்பிகள் இல்லாவிடில் பெரிய காற்று அடித்தாலும் ஆடுமாடுகள் குறுக்கே நடந்து போனா லும் கொடிகளெல்லாம் ஒரு புறமாகக் குவிந்து விடக்கூடும்.

இலைக்காம்புகளுக்கும் தண்டுக்கும் இடையே உள்ள கணுச்சந்துகளிலிருந்து இக்கொடியின் கிளைகள் பிரிந்து வளர்ந்து படரும். இக்கணுக் களிலேதான் பூக்களும் பிஞ்சுகளும் உண்டா கும். இப்பூக்கள் பொன்னிறமானவை. முதலில் தோன்றும் பூக்களினடியில் பிஞ்சுகள் தோன்று வதில்லை. இவ்விதமான பூக்களை இந்துக்கள் மார்கழி மாதம் முழுவதும் நாள்தோறும் தங்கள் வீட்டு

வாசல்களில் காலைநேரத்தில் அலங்காரமாக வைப்பது வழக்கம். பிறகு பூக்கும் பூக்களில் சிலவற்றின் அடியிலேதான் பிஞ்சுகள் தோன்றும். இவ்விதப் பிஞ்சுகளே நாளடைவில் காய்களாகவும், பழங்களாகவும் மாறுகின்றன.

பறங்கிப் பிஞ்சு பசுமை நிறமாகவோ அல்லது வெண்பசுமை நிறமாகவோ இருக்கும். இதன் காய்களும் பழங்களும் உருண்டையாகவாவது, அல்லது கோழிமுட்டை வடிவமாகவாவது இருக்கும். பழத்தின் மேற்புறம் உறுதியான ஓடுள்ளது. பழத்தை அறுத்தால் அதன் உட்புறத்தில் கடித்த பழுப்பு நிறமான சதை இருக்கும். இதில் இதன் கட்டையான விதைகள் காணப்படுகின்றன. இவை இந்நார்ச்சதைகளுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும். இவ்விதைகள் வரிசைவரிசையாக ஏராளமாய் ஆறு பத்திகளாகக் காணப்படும். விதையின் ஒரு முனை கூராயும் மற்றொருமுனை அகன்று வட்டமாயும் இருக்கும். இதன் மேற்புறம் வழுவழுப்பாயிருக்கும்.

பறங்கி அமெரிக்காவில் ஏராளமாகச் சாகுபடி செய்யப்பட்டு அதன் பிஞ்சுகளும் பழங்களும் பல ஏழைகளுக்கு முக்கிய உணவாகின்றன. சில நாடுகளில் இப்பழங்களை நறுக்கிக் கறவைப்பசுக்களுக்கு ஆகாரமாகப் போடுகிறார்கள். அவற்றைத் தின்னும் பசுக்களின்பாலும் வெண்ணெயும் பொன்னிறமாகவும் தித்திப்பாகவும் இருக்குமாம்.

தூர் கறவை சூனை

பயிற்சி :—1. அவரைக்கொடிக்கும் பறங்கிக்கொடிக்கும் வித்தியாசம் என்ன? 2. பறங்கிக்கொடிக்குப் பற்றுக் கம்பிகளால் என்ன உபயோகம்? 3. பறங்கி இலையை ஏன் ஆடுமாடுகள் தின்பதில்லை?

10. பண ஆசை

முன்னொரு காலத்தில், பிச்சைக்காரன் ஒருவன் ஒரு பணக்காரன் வீட்டண்டை போய்க் கதவைத் தட்டினான். பணக்காரன் ஓர் உலோபி. கதவைத் திறந்ததும், பிச்சைக்காரன் நின்றுகொண்டிருந்ததைக்கண்ட உலோபி அவனை வெருட்டித் துரத்தி விட்டான். பிச்சைக்காரன் தன் வழியே போய் ஊருக்கு வெளியில் ஒரு மைதானத்தில் ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து யோசிக்கலானான்; பணக்காரனுடைய உபத்திரவத்தின் மகிமையைக் கண்டு மிக வருந்தினான்.


"பணக்காரனாக இருந்து மட்டும் என்ன பிரயோஜனம்? பணத்தைச் சேர்த்து வைப்பதில் என்ன பெருமை? பிறருக்குக் கொடாமல் மூட்டை கட்டிவைத்த பணம் என்ன பயனைத் தரும்? எனக்குப் பணம் இருந்தால் அப்படி இருக்கமாட்டேன். நான் சுகப்படுவதுடன், அயலாருக்கும் உதவுவேன். பணம் இல்லையே என்ற குறைதான்! ஆ! ஆ! ஒரு புதையல் எனக்கு எங்கேயாவது அகப்படாதா! பணம் கிடைத்ததும், உலோபிகளாயிருக்கும் இந்தப் பணக்காரர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று வழிகாட்டுவேன்" என்று இப்படிப் பலவாறு நினைத்து மனம் நொந்தான்.

இவ்விதம் அவன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், திடீரென்று குபேரன் அங்கே அவன்முன் தோன்றினன். "அப்பா! உன் மனத்திலுள்ள குறை என்னவென்பதை நான் அறிவேன். உன்னுடைய வறுமையைப்பற்றி நானும் விசனப்படுகிறேன். உனக்கு உதவிபுரிய நான் வந்திருக்கிறேன். இந்தா! இதோ ஒரு சிறிய பையைத் தருகிறேன். இதில் ஒரு மோகரா இருக்கிறது. பையைவிட்டு அதை நீ வெளியே எடுத்ததும் உடனே இதில் இன்னுமொரு மோகரா வரும். இப்படியே ஒவ்வொன்றாக இதில் வரும் மோகராக்களை எடுத்துக் கொண்டே வந்தால் மோகராக்கள் பின்னும் கிடைத்துக்கொண்டே இருக்கும். உனக்கு வேண்டியமட்டும் மோகராக்களை எடுத்துக்கொள். ஆனால், அந்தக் காசுகளில் ஒன்றையாவது உடனே செலவழிக்கக் கூடாது. உனக்குத் திருப்தியாகும் வரையில் மோகராக்களை எடுத்துக்கொண்டு, பின்பு பையை ஆற்றில் எறிந்து விடு; ஆற்றில் போட்டுவிட்ட பிறகுதான் உனக்குக் கிடைத்த பொருளை நீ செலவு செய்யலாம்" என்று சொல்லிக் குபேரன் மறைந்தான்.

கடவுளருளால் தனக்குக் கிடைத்த அதிருஷ்டத்தைக் குறித்து ஏழை மிக்க களிப்படைந்தான்; குபேரனைப் போற்றினன்; தனக்குக் கிடைத்த பேரருளை நினைத்து, 'இது பொய்யோ, மெய்யோ?' என்று சந்தேகித்தான். "சரி, கடவுளே என்மீது கருணை கூர்ந்திருக்கிறார். இன்றே நான் பெரும்

பணக்காரனாகி அரசனைப்போல வாழ்வேன்'' என்று சொல்லிக் குதித்து எழுந்தான்.

அந்த ஏழை, வீட்டுக்குப்போய்ப் பையிலிருந்து ஒவ்வொரு மோகராவாக எடுத்துக்கொண்டே வந்தான். இரவுக்குள் ஒரு பெருங்குவியல் சேர்த்துப் பையைப் பத்திரமாய்க் காப்பாற்றிவைத்திருந்தான். மறுநாள்காலையில் பணப்பையைத் திரும்பவும் எடுத்



தான். தனக்கு இதுவரையில் கிடைத்த பணம் போதுமா என்று பார்த்தான். ''ஏன்! இந்தப் பணத்தால் என்ன செய்யப் போதும்? ஓர் அரண்மனை வாங்கப்போதும். இன்னும் கொஞ்சம் அதிகமிருந்தால் கொஞ்சம் பூமி வாங்கலாம்'' என்று நினைத்து, மறுபடியும் பையிலிருந்து மோகரா எடுத்தான். இப்படியே தினந்தோறும் யோசித்து யோசித்துப் பொற்குவியலைப் பெருக்கினான். பையை ஆற்றில்

எறியவோ மனம் வரவில்லை. இவ்விதம் பல வாரங்கள் கழிந்தன. பல மாதங்கள் கழிந்தன. வருஷங்களும் கழிந்தன. பணமும் பெருகிற்று; அவன் ஆசையும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. பணத்தை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கவலையும் உண்டாயிற்று. வீட்டிலோ இடமில்லை. பெட்டிகளெல்லாம் நிரம்பி விட்டன; பூமிக்குள் புதைத்தும் வைத்தான்.

ஒவ்வொருநாளும் அந்தப் பிச்சைக்காரன் பொழுதுவிடிந்ததும் ஆற்றங்கரைக்குச் செல்வான்; "பையை எறியலாமா, வேண்டாமா?" என்று யோசிப்பான்; திரும்ப வீட்டுக்கு வருவான்; பின்னும் மோகராக்கள் வருவிப்பான். இப்படியே இவன் காலங்கழித்து வந்தான். அன்ன ஆகாரமுமில்லாமல் இவன் தனது ஆசையையும் பணத்தையும் வளர்த்துக்கொண்டே வந்ததனல் உடல்மெலிந்து வாடினன். பணத்தைக்கொண்டு சுகமாகக் காலம் கழிக்கவேண்டுமென்ற எண்ணமே அவனுக்குப் போய்விட்டது. வீட்டில் இன்னும் பணத்தைப் பத்திரப்படுத்த இடம் போதவில்லை. பண ஆசையும் அவனை விட்டொழியவில்லை. அனேக வருடங்கள் இப்படியே கழிந்தன. வயது முதிர்ந்து தேகம் மெலிந்து கடைசியில் உலோபியாகவே இறந்தான்.

உலோபி	குபேரன்	தரிசனம்
வெருட்டி	மகிமை	மைதானம்

பயிற்சி :—1. பிச்சைக்காரன் முதலில் ஏன் பணத்துக்கு ஆசைப்பட்டான்? 2. பையிலிருந்து கிடைத்த பணம்

எப்போது உபயோகப்படுமென்று குபேரன் சொன்னான்? 3. பணப்பையை ஏன் பிச்சைக்காரன் ஆற்றில் எறியவில்லை? பணமும் ஏன் உபயோகப்படவில்லை? 4. உனக்கு அந்த மாதிரி பை கிடைத்தால் நீ என்ன செய்வாய்?

11. தண்ணீர்

உலகத்திலுள்ள மனிதர்கள், மிருகங்கள், பட்சிகள், தாவரங்கள் முதலான உயிருள்ள எல்லாவற்றிற்கும் தண்ணீர் மிகவும் அவசியமானது. அது ஆறுகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் முதலியவற்றிலின்றும் கிடைக்கிறது. ஆறுகளிலும் ஏரிகளிலும் கிடைப்பது பெரும்பாலும் மழைநீரே. கிணறுகளில் கிடைக்கும் நீர், பூமிக்குள்ளிருந்து ஊறும் நீராகும்.

சாதாரணமாக, தண்ணீர், மனிதர்களும் விலங்குகளும் குடிப்பதற்கு உபயோகப்படுகிறது. அவ்வகையான தண்ணீர் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டுவது அவசியம். தண்ணீரில் பலவித நோய்க் கிருமிகள் இருக்க இடமுண்டு. ஆகவே, நாம் நீரைக் காய்ச்சிக் குடிப்பதே மேலானது.

நீரைக் காய்ச்சிக் குடிப்பது பலருக்கு முடியாது. ஆகவே, பெரிய பட்டணங்களில் ஜலத்தை வடிகட்டிச் சுத்தமாக்கிக் குழாய்களின் மூலமாய் ஜனங்களுக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பெரிய பட்டணங்களுக்கு இப்படி ஜலம் கொண்டுவரும் விஷயத்தில் கவனிக்கவேண்டிய

முறைகள் பல உண்டு. முதலாவதாக, ஜலம் கிடைக்கும் இடம் சுத்தமானதாக இருக்கவேண்டும். இரண்டாவதாக, தண்ணீரைத் தேக்கும் இடம் சுத்தமாக இருக்கவேண்டும். மூன்றாவதாக, தேக்கத்திலிருந்து வீடுகளுக்குப்போய்ச்சேர்வதற்கான குழாய் வழியும் சுத்தமானதாயிருக்கவேண்டும்.

சாதாரணமாகத் தண்ணீரை ஊற்றுக்களிலிருந்து உயரத்தில் கட்டியுள்ள பெரிய தொட்டியில் யந்திர உதவியால் சேர்ப்பார்கள். பிறகு, அங்கிருந்து பெரிய குழாய்மூலம் தெருக்களுக்கு ஜலம் கொண்டுபோவார்கள். பெரிய குழாயிலிருந்து சிறு சிறு குழாய்கள்மூலம் வீடுகளில் ஜலம் கிடைக்கிறது. நமக்கு வேண்டும்போது குழாயைத் திறந்தால் ஜலம் சுலபமாகக் கிடைக்கும்.

இவ்வளவு கஷ்டப்பட்டுத் தண்ணீர் நமக்குக் கிடைப்பதால், அதை உபயோகப்படுத்துவதில் நாம் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஜலத்தை வீணுக்கக்கூடாது. வீதிகளில் உள்ள குழாய்களைச் சில மூடர்கள் திறந்துவிட்டு, "நமக்கென்ன, இது பொதுக் குழாய்தானே" என்று அசட்டையாகப் போய்விடுகிறார்கள். அப்படிச் செய்வது மிகவும் தவறு. அப்படித் திறந்து ஜலம் வீணுகப் போய்க்கொண்டிருக்கும் குழாய்களை நாம் கண்டால் உடனே மூடிவிடவேண்டும். ஜலாதாரம் எல்லாருக்கும் பொது உடைமையாகும்.

சில ஊர்களில் ஜலத்தை வடிகட்டிப் பிறகு குழாய்கள் மூலம் அனுப்புகிறார்கள். அப்படி வடி

கட்டுவதற்கு ஏற்பட்ட இடம் ஸிமெண்டுபூசிய சிறு குளங்களாகும். வெளிப்புறத்திலிருந்து எவ்வித ஜலமும் உள்ளே கசிந்துவராது. சென்னையில் இவ்விதக் குளங்கள் 200 அடி நீளமும், 100 அடி அகலமும் உடையவை. குளங்களுக்கு அடியில் மணல் போட்டிருக்கும். ஜலம், மணலினூல் வடிகட்டப்பட்டு, கடைசியாக ஒரு பெரிய தொட்டியில்போய்ச்சேரும். அந்தத் தொட்டிக்கு 'ரிஸர்வாயர்' என்று பெயர். அது உயரத்தில் கட்டப்பட்டிருக்கும். வடிகட்டுவதற்கு உபயோகப்படும் மணலை அடிக்கடி எடுத்துவிட்டுப் புதிய மணலைக் கொட்டுவார்கள்.

கிராமங்களிலுள்ள ஜனங்களுக்குக் குளங்கள் உபயோகமாகின்றன. பல ஊர்களில் பொதுக் குளங்களிலிருந்து ஜனங்கள் குடிஜலம் கொண்டு போவதைப் பார்த்திருப்பீர்கள். அம்மாதிரியான குளங்களைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். அவைகளுக்குப் பொதுக்காவல் போட்டிருப்பார்கள். ஊரில் தொற்றுநோய்கள் பரவுங்காலத்தில் ஜலத்தை உபயோகப்படுத்துவதில் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

நமக்குத் தண்ணீர் உபயோகப்படுவது போலப் பயிர் பச்சைகளுக்கும் தண்ணீர் அவசியமல்லவா? தண்ணீர் கிடைக்கும் இடங்களிலேதான் பயிர்த்தொழில் செய்யவும், தோட்டங்கள் வைத்துப் பயிராக்கவும் முடியும். ஆறுகளிலிருந்து வரும் ஜலத்தைப் பல கால்வாய்களின் மூலம் நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். சில இடங்களில் ஏரிகள் ஏற்

பட்டுள்ளன. மழைக்காலத்தில் பெய்யும் மழை ஜலம் பள்ளமான ஏரிகளில் தங்கி, கொஞ்சங் கொஞ்சமாக நிலங்களுக்குப் பாய்கிறது. ஏரிகளில் பல மதகுகளின் வழியாய் ஜலம் வெளியிடப்பட்டுச் சிறு வாய்க்கால்கள் வழியாகச் செல்லுகிறது.

ஏரிகளும் இல்லாத இடங்களில் கிணறுகள் வெட்டிக் கபிலை, ஏற்றம் முதலியவற்றால் தண்ணீர் இறைத்துக்கொள்கிறார்கள்.

ஜலத்தின் உபயோகத்தைப்பற்றித் தெரிந்து கொண்டீர்கள். ஜலத்தை அதிக ஜாக்கிரதையுடன் உபயோகிக்கவேண்டிய அவசியத்தை ஒவ்வொரு வரும் கவனிக்கவேண்டும்.

விலங்கு ஜலாதாரம் கால்வாய்

பயிற்சி :—1. கிணற்றுநீர் ஏன் சுத்தமானதாகக் கருதப்படுகிறது? 2. நகரங்களிலுள்ளவர்களுக்குச் சுத்தஜலம் கிடைக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? 3. கிராமங்களிலுள்ள நீர்நிலைகள் கெடாமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

12. கொடைச் சிறப்பு

முற்காலத்தில் குருக்ஷேத்திரத்தில் ஓர் அந்தணர் இருந்தார். அவர், தமது மனைவி, மகன், மருமகள் ஆகிய மூவருடனும் தவம் செய்து கொண்டிருந்தார். அவர், கீழே உதிர்ந்து கிடக்கும் தானியங்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சேர்த்து உணவாக்கிக் கொள்பவர்; மறுநாளைக்கு வேண்டும் என மிகுத்து வைத்துக்கொள்ளாதவர்.

அந்த அந்தணர் நாள்தோறும் மூன்றாவது சாமத்தின் முடிவிலேதான் புசிப்பார். சில நாட்களில் அவருக்கு உணவு கிடைப்பதுமில்லை.

இப்படி இருக்கையில், ஒரு கொடிய பஞ்சம் தோன்றியது. நாட்டில் உணவுப்பொருள்கள் கிடைப்பது அரிதாயிற்று. அதனால், அந்த அந்தணருக்குத் தானியங்கள் கிடைக்கவுமில்லை; சேர்த்துவைக்கப் பட்ட தானியமும் இல்லை. நாளடைவில் அவர் பெரும் பாலும் ஆகாரமில்லாமல் பசியால் வாடலானார்.

ஒருநாள், அந்த நால்வரும், நடுப்பகலில் சூரிய வெப்பம் மிகுதியாயிருப்பதையும் பாராமல், தானியம் பொறுக்கப் புறப்பட்டனர். அன்று ஒன்றும் கிடைக்கவில்லை; மறுநாளும் சென்றனர். அன்று அவர்களுக்கு ஒருபடி தானியம் கிடைத்தது. அதைக் கொண்டுவந்து மாவாகச் செய்தார்கள்; விதிப்படி நித்திய கருமங்களையும் கடவுள் பூஜையையும் செய்தார்கள்; அந்த மாவை நான்கு சமபாகமாகப் பங்கிட்டுக்கொண்டார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மாவைப் புசிக்கத் தொடங்கினர்.

அந்நிலையில், அவர்கள் இருக்குமிடத்திற்கு, பிராய முதிர்ந்தவரும் மிக்க தளர்ச்சி அடைந்தவருமான ஒரு பிராமணர் வந்தார். தருமத்தை அறிந்த அவர்கள், அந்த முதியவரைக்கண்டு மிக மகிழ்ச்சியுள்ளவர்களானார்கள்; அவரை அன்புடன் முகமலர்ந்து வரவேற்று வணங்கினர்கள்; முறைப்படி செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்தார்கள். பிறகு, அந்தணர், தமது பாகமாகிய காற்படி மாவை

யும் வந்தவருக்கு அளித்தார். அவர் அதனை உண்ட பிறகும் அவருக்குப் பசி தணிந்ததாகத் தெரிய வில்லை. இதை அறிந்த அந்தணரின் மனைவியார் தமது பாகத்தையும் அதிதிக்குக் கொடுத்தார். அதிதி அதனையும் வாங்கி உண்டு, மீண்டும் பசி தணி யாதவர் போலவே காணப்பட்டார். அக்குறிப்பைக் கண்ட அந்தணரின் மகன், தனது பாகத்தையும் அதிதிக்கு அளித்தான். அப்பொழுதும், அந்த அதிதி முன்போலவே பின்னும் உணவை விரும்பு பவர்போலக் காணப்பட்டார். கடைசியாக, அந்த அந்தணரின் மருமகளும் தனது பாகத்தைக் கொடுத் தாள். அந்தக் காற்படி மாவையும் பெற்று உண்ட பிறகே, அதிதியாக வந்த அந்தணர் பசி தணிந்த வர்போல மகிழ்வுற்றார்.

அவர், "சாதுவே! பரிசுத்தமானதும், தர்ம மாகவும் நியாயமாகவும் தேடப்பட்டதும், சக்திக்குத் தக்கவாறு கொடுக்கப்பட்டதுமான உமது தானத் தால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உமது கொடை யைத் தேவர்கள் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள்; பூ மழை பொழிகிறார்கள். பசியானது அறிவைப் போக்கும்; தர்ம புத்தியைக் கெடுக்கும்; அறிவுள்ள வனையும் தைரியத்தை இழக்கும்படி செய்யும். அதி கம் சொல்வானேன்? 'பத்தும் பசிவந்திடப் பறந்து போம்.' இப்படி யிருக்க, நீங்கள் பல நாட்கள் உணவின்றி மிகப் பசித்திருக்கையிலும், உங்களது உணவுக்கெனக் கஷ்டப்பட்டுச் சேர்த்த கொஞ்ச உணவையும், உண்ணப்போகும் சமயத்தில், என்

பொருட்டுக் கொடுத்தீர்கள். இதனால், நீங்கள் பசியை வென்றவர்களாகிறீர்கள். பசியை வென்றவனால் அடைய முடியாதது ஒன்றுமில்லை. நீங்கள் சிறந்த பதவியை அடைவீர்கள். மனிதர்களுக்குப் பொருள் கிடைப்பது அரிது. கிடைத்தாலும், தானம் செய்வது மிக அரிது. தானம் செய்வதிலும் தக்க காலம் நேர்வதும், பக்தியிருப்பதும் மிக அரியவை. என்னைச் சாதாரண மனிதனாக எண்ண வேண்டாம். நான் தருமதேவதை. நீங்கள் உங்களுடைய உடல்களைப் பசியால் வாட்டிக் கீர்த்தியை நிலை நாட்டிவிட்டீர்கள். இதோ காணப்படும் விமானத்தில் ஏறிச் சுவர்க்கம் சென்று மகிழ்வீர்களாக'' என்று கூறி மறைந்தார். அந்தச் சாதுவான அந்தணரும், மனைவி மகன் மருமகள் ஆகிய மூவருடனும், விமானத்திலேறிச் சுவர்க்கம் சென்றார்.

தங்களுடைய பலநாள் பசியையும் பொருட்படுத்தாமல், தமது வீட்டிற்கு வந்த அதிதிக்குத் தாங்கள் உண்ணக்கருதிய உணவை விருப்புடன் முகமலர்ந்து கொடுத்து இன்புற்ற இந்தச் சாதுக்களது கொடையே கொடை. அன்னதானத்தினும் சிறந்தது உண்டோ ?

''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே''

வரவேற்பு உபசாரம் அதிதி
சுவர்க்கம் விமானம் சாது

பயிற்சி :—1. பசியினால் வரும் தீமைகள் எவை ?
2. 'நீங்கள் பசியை ஜயித்தவர்களாகிறீர்கள்.' இஃது எவரால் யாரைப்பார்த்து எப்பொழுது கூறப்பட்டது ?

13. உணவு

ஆகார பதார்த்தங்கள் மூன்றுவகைப்படும். முதலாவது, சதையை வளர்க்கும் சத்துள்ள பதார்த்தங்கள். இந்த வகுப்பில் பால், பலவகைப் பருப்புக்கள், இறைச்சி, முட்டை முதலியவைகள் அடங்கியிருக்கின்றன. இரண்டாவது வகுப்பில், கொழுப்புப் பதார்த்தங்கள் சேர்ந்தவை. இதில் ஜீவஜந்துக்களிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் உண்டாகிற கொழுப்புக்களும் எண்ணெய்களும் சேர்ந்தன. மூன்றுவது, கரிஜல வஸ்துக்கள் (Carbohydrates). இவற்றில் பலவகை மாச்சத்துக்களும் சர்க்கரைகளும் அடங்கியிருக்கின்றன. இவற்றைத் தவிர, நம் ஆகாரத்தில் பலவகை உப்புக்களும் தண்ணீரும் கலந்திருக்கின்றன.

உலகத்திலுள்ள மனிதர்களையும் அவரவர்களின் ஆகாரத்தையும் கவனிக்கும்போது, நெல்லைப் போன்ற தானியங்களையும் சர்க்கரைப் பதார்த்தங்களையும் ஆகாரமாகக்கொண்டவர்கள் சரீர வலிமை உடையவராக இருப்பதில்லை. சதையை வளர்க்கும் சத்துள்ள பதார்த்தங்களான பால் முதலியவைகளை உணவாகக் கொள்பவர்களே தேகவன்மையுள்ளவர்களாகவும் கஷ்டங்களைத் தாங்கும் ஆற்றலுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால், தேகம் நல்ல நிலைமையில் இருக்கவேண்டுமானால், நம் ஆகாரத்தில் மேற்சொன்ன சகல ஆகார பதார்த்தங்களும் சரியான அளவில் சேர்ந்திருக்கவேண்டும்.

சதையை வளர்க்கும் சத்துள்ள பதார்த்தங்கள், தேகத்தை வளரச் செய்வதுடன் அதில் ஏற்படும் எல்லா மாறுதல்களையும் செய்வதற்கும் ஆதார மானவை. சர்க்கரைப் பதார்த்தங்களும் கொழுப் புப் பதார்த்தங்களும் உடம்புக்குச் சூடுதரும் உணவு கள் ஆகும். அவை சரீரத்திற்கு உஷ்ணத்தையும் சக்தியையும் தருகின்றன.

உப்புக்கள், சரீரத்திலுள்ள பல திரவங்கள் ஒன் றோடொன்று கலப்பதையும் அவற்றின் காரத்தன் மையையும் சரிப்படுத்துகின்றன. வளரும் சக்தி, ஞாபகம், புத்தி, யுக்தி, சுகம், துக்கம் முதலிய பல குணங்கள்வாய்ந்த இச்சரீரத்தில் நூற்றில் எண்பது பங்குக்குமேல் ஜலமாகவே இருப்பது ஆச்சரியமே. கண்ணீரில்லாவிடில் நாம் உட்கொள்ளும் ஆகாரம் ஜீர்ணமாகி அவயவங்களில் போய்ச்சேர இட மிராது. உப்பும் ஜலமும் கலந்த உணவுகள் மாத் திரம் சரீர போஷணைக்குப் போதா. ஊன வளர்க் கும் பதார்த்தங்களும் சர்க்கரையும் கொழுப்புப் பதார்த்தங்களும் தேக சௌக்கியத்திற்கு முக்கிய மானவை. தேகசுகத்திற்கு அவற்றுடன் மற்றொரு பதார்த்தமும் கலந்திருப்பது அவசியம். இப்பதார்த் தத்திற்கு ஜீவசக்திப் பதார்த்தம், அல்லது 'வைட மின்' (Vitamin) என்று பெயர். இது கண்ணுக்குப் புலப்படாதது. பால், வெண்ணெய், கீரைகள், முட் டைகள், தவிடு, புதுப்பழங்கள், புதுக் கறிகாய்கள், பருப்புக்கள் இவைகளில் அது இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவைகள் கலந்த ஆகாரத்தை

நாம் உட்கொள்ளாவிடில், நாளடைவில் அவயவங்களின் தொழில்கள் குன்றிவிடும்.

தொற்றுவியாதிகள் பல பூச்சிகளால் பரவுகின்றன. நம்முடைய சமையல் அறைகளிலும் ஆகாரங்கள் வைத்திருக்கும் இடங்களிலும் கரப்பு, எறும்பு, ஈ முதலியவைகள் நடமாடிக்கொண்டும் ஆகாராதிகளை ருசிபார்த்துக்கொண்டும் இருப்பதை நாம் தினந்தோறும் பார்க்கிறோம். இவைகள் சுத்தமான இடங்களில் நடமாடுவதில்லை. இவைகளின் ஆகாரம் அழுகிப் பதன்கெடும் பதார்த்தங்களல்லவா? இவைகள், தங்கள் கால்களிலும் உடலிலும் இறக்கைகளிலும் வியாதிகளின் விஷக்கிருமிகளைக் கொண்டு வந்து நம் ஆகாரங்களில் மொய்க்கும்போது அவற்றுடன் சேர்த்துவிடும். பிறகு, அந்த ஆகாரத்தை உட்கொள்ளும் மனிதர்களுக்கு அவ்வியாதிகள் வர இடமுண்டாகும். ஆகையால், ஆகாரபதார்த்தங்களைப் பூச்சிகள் தொடாதபடி மூடிவைப்பது அவசியமல்லவா? சுத்தமான துணிகளாலும் பாத்திரங்களாலும் பதார்த்தங்களை மூடிவைக்கலாம். அல்லது, நான்கு பக்கங்களுக்கும் மிகச் சிறு கண்களுள்ள இரும்பு வலைகள் அடிக்கப்பட்ட அலமாரிகளுக்குள் ஆகாராதிகளை வைக்கலாம். இப்படிச் செய்வதால் பூச்சிகள் உணவுகளைத் தொட இடமிராது. வியாதிகள் பரவவும் வழி இராது. காற்றும் தாராளமாக உள்ளேபோகும்.

நாம் காலங்கடவாமல் குறித்த நேரங்களில் உண்பதோடு தேகபோஷணைக்கு வேண்டிய அள

வுக்கு மாறுக உண்ணுமலிருக்கவும் வேண்டும்.

ஆற்றல் யுக்தி ஊன்

பயிற்சி:—1. ஜீவப் பிராணிகளெல்லாம் உணவு உட் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? 2. நாம் உண் ணும் உணவில் என்ன என்ன பொருள்கள் இருக்கவேண் டும்? 3. ஆகார பதார்த்தங்களைப் பூச்சிகள் தொடாதபடி என் மூடிவைக்கவேண்டும்?

14. பெற்றோர்களிடம் அன்பு

உலகத்தில் மனிதராய்ப் பிறந்தவர் அன்புடை யவராயிருத்தல் சிறந்ததாகும். இவ்வித அன்பு பல திறப்படும். பெற்றோர், உடன் பிறந்தார், வேலைக் காரர், இதரப் பிராணிகள் முதலானவர்களிடம் பிரியமாயிருத்தல் அன்பு எனப்படும். கடவுளிடமும் பெரியோர்களிடமும் செலுத்தும் அன்பு பக்தி என்று சொல்லப்படும். பெற்றோர்களிடம் அன் பாய் நடப்பது ஒவ்வொருவரும் கைக்கொள்ளவேண் டிய முதற்கடமையாகும்.

நம்மைப் பெற்றவரும் காலாட்டி வளர்த்த வரும் தாயன்றோ! நமக்கு உணவு உடை முதலிய வற்றைக் கொடுத்துப் படிப்பித்து, அறிவுடையவ ராக்கியவர் தந்தையல்லவா? அவர்களிடம் நாம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்துகொள்வ தோடு, எக்காலத்திலும் அவர்களுடைய விருப்பங் களை நிறைவேற்றிவரவும் வேண்டும். இப்படி நடந்து வருகிறவர்களே சிறந்த புதல்வர் ஆவார்.

பெற்றோரது குறிப்பறிந்து நடப்பதையும், அவர்களுடைய முதுமைக்காலத்திலும் அவர்களுடைய ஆணையை ஏற்றுக்கொண்டு நடப்பதையும், ஓர் உத்தமப் புதல்வன் தன் கடமைகளென நன்கு உணர்வான். இவன் தன் பெற்றோரையே பெருந் தெய்வமென மதிப்பான். இவ்விதக் குணமுள்ள வனுக்கு மலைபோன்ற துன்பம் வரினும், அது பனி போல் விரைவில் நீங்கும்படி எங்கும் நிறைந்துள்ள கடவுள் அருள் புரிவார்.

ஐரோப்பா ஆப்பிரிக்கா என்ற இரு கண்டங் களுக்கும் இடையே மத்தியதரைக் கடல் இருக்கிறது. அதில் 'ஸிஸிலி' என்னும் ஒரு தீவு உண்டு. அத் தீவில் 'எட்ன' என்ற ஓர் எரிமலை இருக்கிறது.

அனேக நூற்றாண்டுகளுக்கு முன்பு, அந்த எரி மலை திடீரென்று ஒருநாள் நெருப்பையும் உருகிய கற்களையும் நெடுந்தூரம் வரையில் வாரி இறைக்கத் தொடங்கிற்று. இதைக் கண்ட பக்கத்து ஊர்களி லுள்ள மனிதர்கள் பெருங்குழப்பமடைந்து பரி தவித்தனர். அவரவர் தம்தம் அரிய விலையுயர்ந்த பொருள்களையும் அவசியமான வேறு பலவற்றை யும், தம்தம் குழந்தைகளையும் எடுத்துக்கொண்டு உயிர் தப்பிப்பிழைக்க எண்ணினர்.

அப்போது இரு சிறுவர் மாத்திரம் பொருளைப் பொருளாக எண்ணுமல், வயது முதிர்ந்த தம் பெற் றோர்களையே பெருந்தனமென எண்ணி அவர்களைத் தம் முதுகில் தூக்கிச் சென்றனர்.

இதைக்கண்ட சிலர், "புத்தியுள்ளவர்கள் இப்படியும் செய்யலாமா? வயது சென்ற கிழவர்களால் ஆகக்கூடியது இனி என்ன இருக்கிறது? இன்றோ, நாளையோ இறந்து போகவேண்டிய கிழவர்களைத் தூக்கிக்கொண்டு, வாழ்நாள் முழுவதும் உபயோகப்படக்கூடிய விலையுயர்ந்த பொருள்களைக் கைவிடலாமா?" என்று கூறினர்கள்.

அவ்விருவரும் பிறர் கூறும் அந்தப் பரிகாச வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. பெற்றோர்களைக் காப்பதையே தங்களது முதற்கடமையாகக் கருதித் தூக்கிச் சென்றார்கள். அவர்கள் சென்ற இடமெல்லாம் செழிப்புக் குறையாமலிருந்தன.

அக்காலத்திலிருந்த பெரியோர்கள், 'உத்தமர்களுடைய பெரும் புண்ணியத்தினால் அந்த இடம் இப்படிக் காப்பாற்றப்பட்டது' என்று நம்பினர்கள். பின்னர், அந்த இடத்தை 'புண்ணியர் சென்ற புலம்' என்று வழங்கலாயினர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

"ஏவா மக்கள் மூவா மருந்து"

பக்தி	ஆணை
எரிமலை	தூற்றுண்டு
உத்தமர்	புலம்

பயிற்சி :—1. சகோதரர் இருவரும் செய்த காரியம் யாது? 2. 'பிறர் கூறும் பரிகாச வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை.' பரிகாச வார்த்தைகள் எவை? 3. எரிமலைகளால் உண்டாகும் தீமைகள் யாவை?

15. தவளை

என் பெயர் தவளை. நான் நீரிலும் நிலத்திலும் வசிப்பேன். ஈர நைப்புள்ள இடங்கள் எனக்கு ஏற்ற வாசஸ்தலம். என் பிறப்பு வளர்ச்சி யெல்லாம் நீரிலேதான். நான் பெரியவனான பிறகே கரைக்கு வருவேன். என் மேற்பக்கம் பசுமை நிறமாக இருக்கிறது அல்லவா? அதனால், என்னைச் சுற்றியிருக்கும் புல்லுக்கும் எனக்கும் வித்தியாசம் தெரியாது. எனக்குச் சில உறவினருண்டு. அவர்கள், தேரை, சிடித் தேரை, ஆகாரத்தவளை முதலியவர்களே.

என்னைப் பார்த்தால் உங்களுக்குப் பிடிக்காது. என்னைக்கண்டு குழந்தைகள் பயப்படுவார்கள். நான் ஓர் அதிசயமான பிராணி. என் அவயவங்கள் ஒவ்வொன்றும் விந்தையாகத்தான் இருக்கும். என் தேகத்தின்மேல் மயிரே இராது. என் உடம்பு எந்நாளும் சில்லென்றிருக்கும். என்மேலே வழு வழுப்பான ஒருவகை நீர் ஊறிக்கொண்டிருக்கிறது. நீங்கள் என்னைத் தூக்கினால் உங்கள் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்துவிடுவேன். காகம், கொக்கு, பருந்து, பாம்பு முதலிய என் சத்துருக்களிடமிருந்தும் இலகுவாய்த் தப்புவேன்.

உங்களுக்குக் கழுத்திருக்கிறதே; எனக்குக் கழுத்திருக்கிறதா? பாருங்கள். தலையானது உடலுக்குள் அமுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. தலையோ உருண்டையாயிராமல் தட்டையாயும் முக்கோண

வடிவமாயும் இருக்கிறது. கண்கள் மிகப் பெரியவை. அவை வெளியே பிதுங்கி இருக்கின்றன. தலையைத் திருப்பாமலே நான் எந்தப் பக்கமும் பார்ப்பேன். என் பின்புறம் நிகழ்பவை எல்லாம் எனக்கு நன்றாகத்தெரியும். உங்களுக்கிருப்பது போல எனக்கு இரண்டு நாசித்துவாரங்கள் இருக்கின்றன. அவை தலையின் முன்புறமாக வாயின் மேற்பக்கத்திலே பக்கத்திற்கு ஒன்றாக இருக்கின்றன. எனக்கு விலா எலும்புகளில்லை. நான் உங்களைப் போல மூச்சு இழுக்க முடியாது. வெளிப்பக்கமுள்ள காற்று நாசித் துவாரங்கள் வழியாக வாய்க்குள் போகும். அப் போது வாயின் அடிப்பக்கம் பருக்கும். நாசித் துவாரங்கள் மூடிக்கொள்ளும். பிறகு, வாயினுள் ளிருக்கும் காற்றை, ஆகாரத்தை விழுங்குவதுபோல உள்ளே விழுங்கி அதனைச் சுவாசப்பைக்குள் தள்ளு வேன். நான் மூச்சு வாங்குவது இப்படியே. பிறகு, பருத்த உடல் சுருங்கச் சுவாசப் பைக்குள் இருக் கும் காற்று வாய்க்குள் தள்ளப்பட்டு, நாசி வழியாக வெளியே போகும். இப்படி நான் மூச்சை வெளி விடுகிறேன்.


உங்களைப்போல நான் நடந்து போகிறதில்லை; தத்தித் தத்தியே செல்வேன். ஏன் தெரியுமா? எனது முன்கால்களிரண்டும் மிகக்குட்டையானவை. நான் உட்கார்ந்திருக்கும்போது என்னுடலை இவை தாங்கிக் கொண்டிருக்கின்றன. எனக்கு அதிகம் உபயோகப்படுபவை பின்னங்கால்களே. இவை மிக நீண்டு பருத்துப் பலமுள்ளவை. இவைகளாலே

தான் நான் தாவித் தாவிப் போகிறேன். நீரில் நீந்துவதற்கும் இக்கால்களே உபயோகப்படுவன. இக்கால்களிலுள்ள ஐந்து விரல்களும் மெல்லிய தோலினால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இத் தோலடிகளால் தண்ணீரை உதைத்துத் தள்ளிக் கொண்டு மிக உல்லாசமாக நீந்துவேன்.

எனக்குப் பிரியமான இருப்பிடங்கள் நீர்நிலைகளும், வயற்புறங்களும், அவற்றிற்கு அருகிலுள்ள இடங்களுமாம். அங்கே கிடைக்கக்கூடிய பூச்சி புழுக்களும் நத்தைகளும் எனக்கு ஆகாரம். என் வாய் மிகப்பெரியது. இது காதுவரையில் இருபுறமும் பிளவுபட்டு நீண்டிருக்கிறது. இதனுள் ஒரு நாக்கும் மேல் தாடையில் பல பற்களும் இருக்கின்றன. இப்பற்கள் பின்பக்கமாய் வளைந்திருக்கின்றன. ஆகையால், ஆகாரத்தை மென்று தின்ன என்னால் முடியாது. மெல்லாமலே விழுங்கிவிடுவேன்.

உங்கள் நாக்கு, பின்புறம் அடிப்பக்கத்தில் இணைக்கப்பட்டு முன்பக்கமாய் வெளியே நீண்டிருக்கிறது. எனக்கோ, நேர்மாறாக, நாக்கு வாயின் முன்பக்கத்தில் இணைக்கப்பட்டு மேற்பக்கமாக இரண்டாக மடிந்து பின்னுக நீண்டிருக்கிறது. இதன் மேற்புறம் பிசுபிசுப்பாயிருக்கும். எனக்கு ஆகாரமாகக்கூடிய எதுவும் என்னருகில் வந்தவுடன் நான் நாக்கைத் தீடீரென்று வெளியேநீட்டி அதைப் பிடித்து உள்ளே இழுத்து விழுங்கிவிடுவேன். சில சமயங்களில் எனக்கு நத்தைகளும் அகப்படும்.

அவற்றை வாயினற் கௌவிப் பிடிப்பேன். இப் படிப்பட்ட சமயங்களிலேதான் என்னுடைய பற்கள் எனக்கு உதவும். இப்பற்கள் வாயிலுள்ள ஆகாரத் தைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளும். அதனை வெளியே நழுவவிடா. பிறகு, அந்த உணவைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்குவேன்.



நான் தண்ணீருக்குள் வெகுநேரம் இருப்பேன். நான் நாசியினல் மூச்சுவிடுவதைத் தவிர மேல் தோலினலும் மூச்சுவிடுவேன். பிசுபிசுப்பான என் தோலின்மேல் மிக நுட்பமான துவாரங்கள் நிறைந் திருக்கின்றன. நான் தண்ணீருக்குள் இருக்கும்

போது, இத்துவாரங்களுள் தண்ணீர் புகும். அதி லுள்ள பிராணவாயுவை என் மேல்தோலை அடுத் திருக்கும் இரத்தக் குழாய்கள் உறிஞ்சும். அசுத் தக் காற்று வெளியே போகும்.

மாரிக்காலம் நீங்கிக் கோடைக்காலம் பிறந்த வுடன், நாங்கள் ஜலத்தினடியில் முட்டைகள் இடு வோம். பிறகு, இவற்றைப்பற்றி நாங்கள் கவலைப் படுகிறதே இல்லை. இம்முட்டைகளைச் சுற்றியிருக் கும் சவ்வுபோன்ற பதார்த்தம் பருத்து இலேசாகி முட்டைகளுடன் தண்ணீரின் மேற்பரப்பில் மிதக் கின்றது. இம் முட்டைகள் சூரிய உஷ்ணத்தினால் பொரியக் குஞ்சுகள் வெளியே வருகின்றன. அப் போது இவற்றிற்கு மீன்களுக்கு இருப்பதுபோலத் தலையும் வாலுமே இருக்கும். சில நாட்கள் சென்ற பின் இரு பின்னங்கால்களும் முளைக்கின்றன. அப் புறம் முன்னங்கால்கள் முளைக்கின்றன. பிறகு, வால் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து முழுதும் மறைந்து விடுகிறது. முதலில் மீன் போலிருந்த குஞ்சு முடிவில் என்னைப்போலாகிறது. இதுவே என் பிறப்பும் வளர்ச்சியுமாகும்.

நைப்பு	நிகழ்பவை
இணை	தோலடி
பிசுபிசுப்பு	சவ்வு

பயிற்சி :—1. தவளை ஏன் கையிலெடுத்தால் நழுவிக் கீழே விழுந்துவிடுகிறது? 2. தவளை ஏன் நடக்காமல் தத்திச் செல்லுகின்றது? 3. தவளையின் பிறப்பையும் வளர்ச்சியை யும் பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

16. பொறுமையுள்ள வேலைக்காரன்

பொருள் உலக வாழ்க்கைக்கு அவசியமாகிறது. பணமில்லாதவன் இவ்வுலகில் பிணத்திற்கு ஒப்பாவான். பொருளைச் சம்பாதிக்கப் பல வழிகள் உண்டு. சிலர் விவசாயம் கைத்தொழில் முதலியவைகளைச் செய்தும், சிலர் வியாபார முறைகளிற் பழகியும், சிலர் நெற்றி வியர்வை நிலத்தில் வடிய உடம்பை வருத்திக் கடுமையான வேலைகளைச் செய்தும், பொருளைத் தேடுகிறார்கள். வேறு சிலர், கல்வி கேள்விகளிற் சிறந்து அறிவு வளர்ச்சியைப் பெற்றுப் பல விதப் பதவிகளில் அமர்ந்து, உலகத்துக்கு வழிகாட்டிகளாக இருந்து பொருளைத் தேடுகின்றனர்.

பிறரிடம் வேலையில் அமர விரும்பும் ஒருவனிடம் சில குணங்கள் அவசியம் இருக்கவேண்டும். பொறுமை, கீழ்ப்படிதல், உண்மையுடைமை, கடமையுணர்ச்சி இவை போல்வன முக்கியமானவைகளாகும். இக்குணங்கள் அமைந்தவனுக்கு, எங்கே சென்றாலும் வேலைகிடைக்கும். இதனை விளக்க ஒரு கதை உண்டு. அது வருமாறு :—

பல நூற்றாண்டுகளுக்குமுன், வட இந்தியாவில் ஓர் அரசன் ஒரு சிறு நாட்டை ஆண்டுவந்தான். அவனிடம் இருந்த வேலைக்காரர்கள் உண்மை, பொறுமை, கடமையுணர்ச்சி முதலிய நற்குணங்கள் அமையப் பெற்றவர்களாய் இருந்தார்கள். ஆகையால், அரசன் அவர்களுக்கு நற்புத்தி புகட்ட எண்ணினான்.

"எனக்கு ஒரு பொருமையுள்ள வேலைக்காரன் வேண்டும். நான் இடும் வேலையைச் செய்யக்கூடிய ஒருவனுக்கு ஏராளமான பொருளுங் கொடுத்து உயர்ந்த உத்தியோகமும் கொடுப்பேன்" என்று அரசன் தன் நாடெங்கும் பறை சாற்றும்படி உத்தரவிட்டான்.

மறுநாட் காலைமுதல், ஒவ்வொரு நாளும், நூற்றுக் கணக்கானவர்கள், அரசன் ஏவின வேலையைச் செய்ய வந்து கூடினர். அரசன் அவர்களை நோக்கி "இதோ இருக்கிற கிணற்றிலிருந்து தண்ணீரை மொண்டு இந்தப் புதிய மூங்கிற் கூடையில் ஊற்றி இன்று மாலை ஐந்து மணிக்குள் இதனை நிரப்பிக் காட்டவேண்டும். உங்கள் திறமையைக் காட்டி உங்களில் யாராவது ஒருவர் நான் கொடுக்கும் வெகுமதிகளைப் பெறுவீராக" என்றான்.

இதைக் கேட்டதும், சிலர் தாம் வந்தவழியே வெட்கித் திரும்பிச் சென்றனர். வேறு சிலர், "இது எப்படி முடியும்?" என்று மலைத்து நின்றனர். பின்னும் சிலர், இரண்டு அல்லது மூன்று மணிநேரம் வேலைசெய்து பார்த்தும் கூடையில் சிறிதும் தண்ணீர் தங்காததைக்கண்டு சலிப்படைந்து சென்றனர். இவ்வாறு நாட்கள் பல சென்றன.

இப்படியிருக்க, ஒருநாள், புதியவன் ஒருவன் அவ்வேலையை ஒப்புக்கொண்டு செய்ய அவ்வரசனிடம் வந்தான். அரசன், அவ்வேலைக்காரனை நோக்கி, "அப்பா! பல நாட்களாகப் பலர் பலவாறு

முயன்றும், என் விருப்பப்படி, நான் ஏவின இவ் வேலையைச் செய்து முடிக்கத் திறமையற்றவர்க ளாய் இடையிடையே விட்டுச் சென்றனர்'' என்றான்.

இதைக்கேட்டு, அப்புதிய மனிதன், அரசனை நோக்கி, ''அரசரே! தங்கள் கட்டளை எதுவோ அதைச் செய்வதுதான் என்னுடைய கடமை. அதன் பயனைப்பற்றி யோசிப்பதும், அதைச்செய்து முடிப்பதிலுள்ள கஷ்டசுகங்களைப் பற்றி ஆராய்வதும் என்னுடைய கடமையல்ல. காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணிவரையில் இக்கிணற்றிலுள்ள நீரை மொண்டு கூடையில் ஊற்றுவது எனக்கிட்ட வேலையாகும். கூடையில் நீரை நிரப்ப முடியுமா முடியாதா என்பதைப்பற்றி நான் யோசிக்க வேண்டியதில்லை யென்றே எண்ணுகிறேன். கடவுள் என் உழைப்புக்குத் தக்கவாறு படியளக்க மாட்டாரா? தயைசெய்து உத்தரவு கொடுங்கள்'' என்று வணங்கித் தெரிவித்துக் கொண்டான். அரசனும் அனுமதி அளித்தான்.

பிறகு, அவ்வேலைக்காரன் அன்று காலை எட்டு மணிமுதல் மாலை ஐந்துமணி வரையில் கொஞ்சமும் சலிப்பின்றித் தண்ணீரை மொண்டு மொண்டு கூடையில் ஊற்றிக்கொண்டிருந்தான். ஆனால், கூடையில் சிறிதளவுகூடத் தண்ணீர் நிரம்பவில்லை; அவனும் சிறிதும் சலிப்படையவில்லை. கிணறு முழுதும் வற்றிப்போயிற்று. வேலை நிறுத்தவேண்டிய நேரம் கிட்டியது. வேலைக்காரன் தண்ணீரை

வறண்டி வறண்டி எடுத்துக் கூடையில் ஊற்றிக் கொண்டிருந்தான். கூடையில் பளிச்சென்று ஏதோ ஒன்று மின்னிற்று. பிறகு, அவ்வேலைக் காரன் அதைக் கையால் மெல்ல எடுத்துப் பார்த்தபொழுது, அது மதிப்பிட முடியாத ஓர் உயர்ந்த மோதிரமாயிருக்கக் கண்டு அதை ஜாக்கிர தையாக முடிந்து வைத்துக்கொண்டான். 'அரசன் வந்தவுடன் அதை ஒப்புவிக்கவேண்டுமே' என்ற கவலையோடு, அடிக்கடி அம்முடிச்சைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே, கிணற்றை வறண்டி வறண்டி மொண்டு, மணலும் நீருமாகக் கூடையில் ஊற்றிக் கொண்டே இருந்தான். இப்படிப் பொறுமையோடு, பகல் முழுவதும், ஒருவனுவது வேலை செய்ததே இல்லை.

மாலை ஐந்துமணிக்கு, அரசன், வேலைக்காரனை அணுகி, "ஏனப்பா! கூடை நிரம்பிவிட்டதா?" என்று கேட்டான். அதற்கு, வேலைக்காரன், "அரசே! கிணறு வறண்டு போயிற்று; கூடை நிறைந்தபாடில்லை. இதோ இந்த மோதிரம் இக் கிணற்றிலிருந்து கிடைத்தது" என்று சொல்லி அம்மோதிரத்தை அரசனிடம் கொடுத்துவிட்டு, மறுபடியும் தண்ணீரை மொண்டு மொண்டு கூடை யில் ஊற்றத் தொடங்கினன்.

அரசன், அவ்வேலைக்காரனை நோக்கி, "அப்பா! நான் வேண்டுமென்றே இம்மோதிரத்தைக் கிணற் றில் போட்டு வைத்திருந்தேன். நீயே உண்மை

யுள்ளவன். உன் பொறுமைக்கு மெச்சுகிறேன்'' என்றான். பிறகு அரசன் அவ்வேலைக்காரனுக்கு ஏராளமான பொருளை வெகுமதியாகக் கொடுத்தது மன்றி, அவனைத் தன்னுடைய அரண்மனையில் ஒரு நம்பிக்கையுள்ள உத்தியோகத்திலும் அமர்த்திக் கொண்டான்.

''உண்மை உயர்வளிக்கும்''

''பொறுத்தார் பொன் பெறுவார்''

கடமையுணர்ச்சி ஏராளம் சலிப்பு

பயிற்சி :—1. ஒருவன் நல்ல நிலைமைக்கு வர அவன் கைக்கொள்ளவேண்டிய குணங்கள் யாவை? 2. பொறுமையின் சிறப்பையாவது கீழ்ப்படிதலின் சிறப்பையாவது விளக்க ஒரு கதை கூறுக.

17. சர்க்கரை

உலகத்தில், ஜனங்கள், சர்க்கரையைச் சாதாரண ஆகாரப்பொருளாக நெடுங்காலமாய் உபயோகித்து வருகிறார்கள். தேகத்தில் சூடு உண்டாவதற்காக நாம் சர்க்கரையைச் சாப்பிடுகிறோம். சர்க்கரை, தண்ணீரில் மிகச் சுலபமாகக் கரைகிறது. தேகத்தின் அனலைக் காப்பதற்காக நாம் உட்கொள்ளும் பல ஆகார பதார்த்தங்களுள் சர்க்கரையே மிக இலகுவாக ஜீர்ணமாகக் கூடியது. இக்காரணம் பற்றியே நம்முடைய பாலர்களுக்கு ஊட்டும் ஆகாரங்களுடன் சர்க்கரை சேர்க்கப்படுகிறது. பிறந்து சில மாதங்கள் வரையில் சிசுக்களுக்குக்

கொடுக்கும் தாய்ப்பாலில் சர்க்கரை வேண்டிய அளவு இருக்கிறது. இதனாலேதான் குழந்தைகளுக்கு ஒன்பது மாதம் வரையில் பாலைத்தவிர வேறு ஓர் ஆகாரமும் தேவையாயிருப்பதில்லை. சுபாவமாகவே குழந்தைகளுக்குச் சர்க்கரையில் மிகப் பிரியம். ஆகையால், சிறுவர்களின் தேக வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஆகாரப் பொருள்களில் சர்க்கரை ஒன்றென்று கருதப்படுகிறது. சர்க்கரையைத் தின்பதனால் பெரியவர்களுக்கு உண்டாகும் தொந்தரவுகள் சிறுவர்களுக்கு உண்டாவதில்லை. இதனை அவர்கள் உட்கொண்டால், வெகு சீக்கிரம் வேறு பொருள்களாக மாறி, இது ஜீர்ணமாகி விடுகிறது. ஆகையால், குழந்தைகள் சர்க்கரையைக் கொஞ்சம் அதிகமாகத் தின்றாலும் பாதகமில்லை. சர்க்கரையைச் சிறுவர்கள் தின்னக்கூடாதென்று சொல்வது சரியன்று.

செடியானாலும் மரமானாலும் எல்லாவகைத் தாவரங்களிலும் சாறு உண்டு. சிலவற்றில் சாறு கொஞ்சமாகவும் சிலவற்றில் அதிகமாகவும் இருக்கும். சில தாவரங்களின் சாறு இனிப்பாயிருக்கிறது. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் முதலிய பழங்களை நாம் விரும்பித் தின்கிறோம். ஏன்? அவற்றிலுள்ள சாறு அருந்த இனிப்பாக இருக்கின்றது. அவற்றில் சர்க்கரை கலந்திருக்கிறது. நாம் அருந்துவதற்கென்று இருக்கும் இனிப்பான பழங்களிலிருந்து சர்க்கரை செய்வதில்லை. நாம் உபயோகிக்கும் சர்க்கரையில் பெரும்பாகம் கருப்

பஞ் சாற்றிலிருந்து கிடைக்கிறது. பீட் ரூட் என்ற ஒருவிதக் கிழங்கிலிருந்தும் மேபிள் என்ற ஒருவித மரத்தின் சாற்றிலிருந்தும் சர்க்கரை எடுக்கிறார்கள்.

கரும்பு என்பது ஒருவிதப் புல். சர்க்கரை கிடைக்கும் எல்லாவிதத் தாவரங்களைக் காட்டிலும்



[By courtesy of the Director of Agriculture, Madras.


கரும்பிலிருந்துதான் அதிகப்பாகம் சர்க்கரை செய்யப்படுகிறது. நமது தேசத்தில் பயிராகும் பயிர்களில் கரும்பும் ஒன்று. இங்நாட்டிலிருந்துதான் கரும்பு அயல் தேசங்களுக்குக் கொண்டுபோகப்

பட்டது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது உலகத்திலுள்ள உஷ்ணப் பிரதேசங்களிலெல்லாம் கரும்பு சாகுபடி மிகுதியாக நடக்கிறது. கரும்பு பூசாரத்தை விசேஷமாக இழுத்துக்கொண்டு நிலத்தை உரம் குறைந்ததாகச் செய்யும். ஒரு வருஷம் கரும்பு நட்ட நிலத்தில் மறுவருஷம் போதுமான அளவு உரம் போடாமல் சாகுபடி செய்தால் அந்நிலம் அதிகப் பலன் கொடாது. கரும்புக்கு ஏற்ற உரம் கொட்டிலெரு, பிண்ணாக்கு, மீனெரு முதலியனவாகும்.

கரும்பில் வெண்கரும்பு, செங்கரும்பு, நாணற் கரும்பு என்று பல ஜாதிகள் உண்டு. இத் தென் னிந்தியாவில் கரும்பு சாகுபடி ஜூலை மாதத்தில் ஆரம்பமாகிறது. கரும்பு ஒரு வருஷப் பயிர். இவ்வருஷம் ஜூலையில் நட்ட கரும்பை அடுத்த வருஷம் ஜூன் மாதத்தில் வெட்டலாம். சில சம யங்களில் சில மாதம் முந்தியும் கரும்பை வெட்டுவது உண்டு. பொதுவாகக் கரும்புகள் பூ விடுவதற்கு முந்தியே வெட்டப்படவேண்டும். பூப்பதற்கு முந் தித்தான் கருப்பங்கழிகளில் சாறு அதிகமாகவும் தடிப்பாகவும் இனிப்பாகவும் இருக்கும். வெட்டப் பட்ட கரும்புகளிலிருந்து இனிப்பில்லாத உப்புக் கரிக்கக்கூடிய கொழுத்தாடைகளும் இலைகளும் நறுக்கப்படும். பிறகு, கரும்புகளை ஆலைகளுக்குக் கொண்டுபோவார்கள்.

அங்கே சாறு பிழியும் யந்திரத்தில் இரும்பு உருளைகளுக்கு இடையில் கரும்புகளைக் கொடுத்து

அவற்றினின்றும் சாறு பிழியப்படும். இச்சாறு யந்திரத்தின் அடியில் வைத்திருக்கும் வெள்ளீயம் பூசின பாத்திரங்களில் வடியும். பிறகு, சாற்றைச் செப்புக் கொப்பரைகளில் ஊற்றி அடுப்புக்களின் மேல் வைத்துத் தீ மூட்டிக் காய்ச்சுவார்கள். அப் பொழுது காய்ந்து கொண்டிருக்கும் சாற்றில் சுண்ணும்புத் தண்ணீரையாவது எண்ணெய் கலந்த பாலையாவது தெளிப்பார்கள். அழுக்கெல் லாம் மேலே வரும். வரவர அதனைத் துடுப்பால்



வாரி எறிந்து விடுவார்கள். சாற்றிலுள்ள நீரெல் லாம் வற்றி வெல்லப்பாகு கூழ்போலாகும். பாகு சரியான பதத்திலிருக்கும்போது அடுப்பிலேற்றிய பாத்திரங்களைக் கீழே இறக்கிவிடுவார்கள்.

பிறகு, அப்பாகை அச்சுக்களில் ஊற்றி ஆற வைப்பார்கள். இப்படி ஆறின பாகுதான் அச்சு வெல்லமாகும். அப்பாகை இன்னும் சிறிது முறு கும்படி காய்ச்சி ஆறவைத்தால் அது பழுப்புச் சர்க்கரை ஆகும். மறுபடியும் அதனை ஜலத்தில்

கரைத்துக் கரியுடன் கலந்து வைப்பார்கள். பிறகு, வடிகட்டி எடுத்துக் காய்ச்சினால் சீனிச் சர்க்கரை கிடைக்கும்.

ஐந்நூறு வருஷங்களுக்கு முன் வரையில் சர்க்கரையைப்பற்றி ஆங்கிலேயர்களுக்கு ஒன்றும் தெரியாதாம். அவர்கள் சர்க்கரைக்குப் பதிலாகத் தேனை உபயோகித்து வந்தார்கள். சர்க்கரையை நாம் பலவிதமாக உபயோகிக்கிறோம். ஆகார பதார்த்தங்களுக்கும் பானங்களுக்கும் சுவைகொடுக்கச் சர்க்கரையை அவற்றுடன் சேர்க்கிறோம். இலேகியம், ஷர்பத்துக்கள் இவற்றோடும் சர்க்கரை சேர்க்கப்படுகிறது.

அனல்	உரம்	கொழுத்தாடை
வெள்ளீயம்	கொப்பரை	இலேகியம்

பயிற்சி :—1. பழுப்புச் சர்க்கரை எவ்வாறு செய்யப்படுகிறது? 2. நமது தேசத்தில் கரும்பு ஆலைகள் எங்கே விசேஷமாயுள்ளன? சர்க்கரைசெய்யும் இடங்கள் எவை? 3. சர்க்கரையின் உபயோகம் என்ன? 4. தேகவளர்ச்சிக்குச் சர்க்கரை மிக அவசியமானது என்பதை விளக்குக.

18. உபமன்யு

பண்டைக்காலத்திலே அயோதர் என்று பெயர்பெற்ற ஒரு ரிஷி இருந்தார். அவருக்குத் தௌமியரென்னும் பெயரும் உண்டு. அவர் சிறந்த தவங்களைச் செய்து முடித்தவர்; சபிக்கவும் வாழ்விக்கவும் வல்லமையுள்ளவர். உண்மையான குரு

பக்தி நிறைந்த மாணவர்களுக்கு எல்லா வித்தைகளும் எளிதில் கைகூடச் செய்யவல்லவர்.

அந்த அயோத தரிஷியிடம் கல்வி பயிலவந்த மாணவர்களுள் உபமன்யு என்பவன் ஒருவன். ஒருநாள், அவர் அந்த உபமன்யுவை நோக்கி, "குழந்தாய்! உபமன்யு! பசுக்களை மேய்" என்று உத்தரவிட்டு அனுப்பினர். அவன், ஆசிரியர் கட்டளைப்படி, தினந்தோறும் பசுக்களைப் பகல் முழுதும் மேய்த்துக் காப்பாற்றிச் சாயங்காலத்தில் ஆசிரியர் வீட்டுக்குவந்து அவர் முன் நமஸ்காரம் செய்து நின்று கொண்டிருந்தான்.

அயோதர், தம்முடைய சிஷ்யன் உடல் வலிமையுடன் இருப்பதைப் பார்த்து, "அன்புடைய உபமன்யு! நீ எதனை உண்ணுகிறாய்? அதிக பலமுள்ளவனாக இருக்கிறாயே" என்று வினவினர். இவ்வாறு வினவிய குருவுக்கு, "ஐயா! பிக்ஷையினால் உயிர்வாழ்கிறேன்" என்று உபமன்யு பதில் உரைத்தான். ஆசிரியர் மீண்டும் மாணவனைப் பார்த்து, "பிக்ஷையை என்னிடம் காட்டாமல் உண்ணுதே" என்று உத்தரவு செய்ய, மாணவனும், "உத்தரவுப்படியே செய்வேன்" என்று பிக்ஷை எடுத்துவந்து அதனை ஆசிரியருக்குக் காட்டினான். அவர் அந்தப் பிக்ஷை முழுவதையும் வாங்கிக் கொள்ள, மாணவன், சரி என்று சொல்லி, மறுபடியும் பகலிற் பசுக்களை மேய்ப்பதும் மாலையில் வீடு வந்து குருவை வணங்குவதும் தவறாமல் செய்து கொண்டிருந்தான்.

அயோதர், உபமன்யுவிடம் பிக்ஷை முழுவதையும் தாம் வாங்கிக்கொண்டபிறகும் அவன் இவ்வாறு காமலிருப்பதைப் பார்த்து, "அன்புமிக்க மாணவனே! நீ இப்பொழுது எப்படி ஜீவனம் செய்கிறாய்?" என்று கேட்டார். கேட்டவுடனே, அவன், "பகவானாகிய உங்களிடம் முதல் பிக்ஷையைக் கொடுத்துவிட்டு இரண்டாமுறை பிக்ஷையெடுத்து உண்பதால் பிழைத்து வருகிறேன்" என்று சொன்னான். அவன் இப்படிச் சொன்னதும், குரு, "இஃது ஒழுங்கான குருகுலவாசம் அன்று; பிக்ஷைவாங்கிப் பிழைக்கிற மற்றவர்களுடைய பிழைப்புக்கு விரோதம் செய்கின்றாய்; இப்படிச் செய்வதனால் நீ ஆசைக்காரன் ஆகிறாய்" என்றார். அவன், சரி என்று சொல்லி, வழக்கம்போலப் பசுக்களை மேய்ப்பதும் குருவை வணங்குவதும் செய்துகொண்டு வந்தான்.

உபாத்தியாயர், தாம் அப்படிச்செய்தும் அவன் உடல் தளராமலிருப்பதைக் கண்டு, "குழந்தாய்! உபமன்யு! நீ இப்பொழுது எப்படி ஜீவிக்கிறாய்?" என மீண்டும் கேட்க, சிஷ்யன், "ஐயா! இப்பசுக்களின் பாலால் பிழைக்கிறேன்" என்றான். உடனே, குரு, "இது, தவறு. பாலை உபயோகித்துக்கொள்ள நான் உனக்கு அனுமதி கொடுக்கவில்லையே" என்று சொல்ல, அவன், "இனி அப்படிச் செய்வதில்லை" என்று பிரதிக்ஞைசெய்து, முன்போலவே பசுக்களைக் காப்பாற்றிக் குருவின் இல்லத்திற்கு வந்து அவரை வணங்கலானான்.

இவ்வாறு அவன் இருக்கும்பொழுதும், உடல்

வலிமை கெடாதிருப்பதை ஆசிரியர் பார்த்து, "உபமன்யு! இன்னும் நீ புஷ்டியுள்ளவனாக இருக்கிறாயே; எதனைப் புசித்துவருகிறாய்?" என்று கேட்க, அவன், "ஐயா! இக்கன்றுகள், தாயின் பாலைக் குடித்து வாய்க்கு வெளியில் ஒதுக்கின நுரையை உண்கிறேன்" என்று மறுமொழி உரைத்தான். உரைக்கவே, அவர், "இந்தக் கன்றுகள் நல்ல குணமுள்ளவைகள்; உன்னிடத்தில் இரக்கத்தினால் மிகவும் அதிகமான நுரையை ஒதுக்குகின்றன. நீ இப்படிச் செய்தலால் இக்கன்றுகளின் உணவிற்கு இடையூறு செய்கின்றாய். நுரையைக்கூட நீ உண்ணக் கூடாது" என்று அவனிடம் கூறினர். அவன், "அப்படியே" என்று உறுதிகொண்டு ஆகாரமில்லாமல் மீண்டும் பசுக்களை மேய்த்தான். அவன், தன் ஆசிரியரால் மறுக்கப்பட்டதால் பிக்ஷையும் புசிக்கவில்லை; வேறொரு பிக்ஷையும் எடுக்கவில்லை; பாலும் பருகவில்லை; நுரையும் உட்கொள்ளவில்லை.

இந்நிலைமையிலிருந்த உபமன்யு ஒருகால் பசியால் வருந்திக் காட்டில் இருந்த எருக்கிலைகளைத் தின்றான்; உப்பும் கைப்பும் காரமும் நிறைந்ததும் ஜீர்ணகாலத்தில் உஷ்ணத்தை உண்டாக்குவதுமாகிய அந்த எருக்கிலையைத் தின்றதால் கண்களை இழந்தான்; பிறகு, குருடனாகவே சஞ்சரித்துக் கொண்டிருந்ததால் ஒருநாள் ஒரு கிணற்றில் விழுந்தான். சூரியாஸ்தமனம் ஆகியும் அவன் வீட்டுக்கு வந்து சேராமலிருப்பதை அறிந்த ஆசிரியர், "உபமன்யு வரவில்லையே" என்று மற்ற மாணவர்களைக்

கேட்க, அவர்கள், "அவன் பசுக்களை மேய்த்துக் கொண்டுவர வனம் சென்றான்" என்றனர். அவர்களுடைய பதிலைக்கேட்ட குரு, "நான் உபமன்யுவைப் பலவிதத்திலும் உணவுகொள்ளாதபடி மறுத்துவிட்டேன். அதனால், அவன் கோபங்கொண்டு வெகு நேரமாகியும் வராமலிருக்கின்றான்; ஆதலால், அவனைத் தேடவேண்டும்" என்று சொல்லி, அந்த மாணவர்களுடன் அரணியஞ் சென்று, "அப்பா! உபமன்யு! எங்கே இருக்கிறாய்? வா" என்று கூவி அழைத்தார்.

ஆசிரியர் அழைத்த ஒலியைக் கேட்ட உபமன்யு, "ஐயா! இதோ நான் இந்தக் கிணற்றில் விழுந்திருக்கிறேன்" என்று உரக்க மறுமொழி கூறினான். அவர், "நீ இக்கிணற்றில் எப்படி விழுந்தாய்?" என்று கேட்டார். அவன், "பசியின் கொடுமையால் எருக்கிலைகளைத் தின்று, கண் னிழந்து அலைகையில் இக்கிணற்றில் விழுந்தேன்" என்று பதில் கூறினான். ஆசிரியர், "உபமன்யு! நீ தேவர்களைத் தோத்திரம் செய். அவர்கள் உனக்குப் பார்வையைக் கொடுப்பார்கள்" என்றார். குருவின் கட்டளைப்படி அவன் தேவர்களைப் பலவிதமாகத் தோத்திரம் செய்தான்.

உபமன்யுவின் சிறந்த தோத்திரங்களைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்த தேவர்கள், அவனிடம் அணுகி, "நல்லவனே! நாங்கள் உன்னிடம் அன்புள்ளவர்களாய் இருக்கிறோம்; இதோ உனக்குப் பக்ஷணம் இருக்கிறது; இதனைச் சாப்பிடு"

என்றனர். இவ்வாறு சொன்ன தேவர்களைப் பார்த்து, "நான் குருவுக்குத் தெரிவியாமல் இந்தப் பக்ஷணத்தைச் சாப்பிடமாட்டேன்" என்று மொழிய, அந்தத் தேவர்கள், "உனது குரு, முன்னே எங்களைத் தோத்திரம் செய்து, நாங்கள் கொடுத்த பக்ஷணத்தைத் தம் குருவுக்குத் தெரிவியாமலே சாப்பிட்டார். உன் குருவைப்போலவே நீயும் செய்" என்றார்கள்.

தேவர்கள் அப்படிச் சொல்லவும், உபமன்யு, "பெரியோர்களே! உங்களை மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன். நான் குருவுக்கு அறிவியாமல் பக்ஷணத்தை உட்கொள்ளமாட்டேன்" என்று உறுதியாகக் கூறினான். அவ்வாறு கூறக்கேட்ட தேவர்கள், "உபமன்யு! உன் குருபக்தியின் மேம்பாட்டால் உன் மேல் அன்பு மிக்கவர்களானோம். உன் உபாத்தியாயருடைய தந்தங்கள் எஃகாக இருக்கின்றன. உனக்கோ பொன்னை இருக்கட்டும். கண்களைப் பெறுவாய். வித்தையையும் அடைவாய்" என்று வரந்தந்து வாழ்த்தினர்கள். அவர்கள் கூறியபடியே உபமன்யு கண்களைப் பெற்று, ஆசிரியரிடம் வந்து வணங்கி, நடந்த செய்திகளை உரைத்தான். அயோதர் அவன் மேல் மிக்க அன்புகொண்டு, "தேவர்கள் அருளிய படி உனக்குக் கல்விப்பயன் கைகூடும்; வேத சாத்திரங்களெல்லாம் விளங்கும்" என்று அனுக்கிரகம் செய்தார்.

உபமன்யு தனது குருபக்தியின் மேன்மையினால்

எல்லாக் கலைகளும் இனிது விளங்கப்பெற்றுப் புக முடன் விளங்கலானன்.

பிள்ளைகளே! கல்வியை அடைவதற்குச் சிறந்த வழி, 'ஆசிரியர் மனத்தில் அன்பு உண்டாகும்படி நடத்தலே' என்பது இந்தச் சரித்திரத்தால் தெளிவாகத் தெரிகின்றதல்லவா?

பிரதிக்கினை	நுரை	கலைகள்
மேம்பாடு	பிரஷை	குருகுலவாசம்

பயிற்சி:—1. உபமன்யுவைப் பரீக்ஷிக்கக் குரு இட்ட கட்டளைகள் யாவை? 2. தேவர்களுக்கு உபமன்யுவின் குருபக்தி எப்படி விளங்கிற்று? 3. காடு என்பதற்கு வேறு இரண்டு பெயர் கூறுக. 4. குருகுலவாசம் செய்து கல்வி பயிலும் முறைக்கும் இக்காலத்துக் கல்வி பயிலும் முறைக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?

19. ஆடை

மனிதர்கள், காற்று உஷ்ணம் குளிர் பனி முதலிய பல சீதோஷ்ண மாறுபாடுகளிலிருந்து தங்கள் உடலைக் காப்பாற்றிக்கொள்ளப் பண்டைக் காலத்தே ஆடை ஏற்பட்டது. குளிர்ந்த தேசங்களில் தேக உஷ்ணத்தை வெளியே விடாமலும் உஷ்ண நாடுகளில் வெளிச்சூடு உடலைத் தாக்காமலும் ஆடை செய்கிறது. இவ்விரு குணங்களும் ஆடைகளுக்கு இருப்பது மனிதர்கள் உலகத்தின் பல பாகங்களிலும் சீதோஷ்ண வேற்றுமைகளைக் கவனியாமல் வசிக்கச் சாதகமாயிற்று.

ஜீவஜந்துக்களில் மனிதர் ஒருவருக்கே பகுத்தறிவு இருக்கின்றது. மிருகம் பக்ஷி முதலியவற்றிற்கு இவ்வறிவு இல்லை. ஆகையால், அவற்றிற்கு இயற்கையாகவேயுள்ள உரோமம் இறகு முதலியன ஆடைபோல உதவுகின்றன. மனிதர்களுக்கு இவ்வறிவும் பலவித சாதகங்களும் இருப்பதால் தங்களுக்கென்று பலவித ஆடைகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இக்காலத்தில் அணியும் ஆடைகள் எல்லாம் பருத்திநூல், கம்பளிநூல், பட்டுநூல், சணல்நூல் முதலியவற்றால் நெய்யப்படுகின்றன. இவ்வாடைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. இயற்கையாய் வெண்மையான பருத்திநூல் துணிகளின்மேல் விழும் காங்கையில் அதிகபாகம் உள்ளே செல்வதில்லை. இப்போது பருத்திநூல் ஆடைகள் மிகுதியாகவே நெய்யப்படுகின்றன.

கம்பளி நூலால் பலவிதத் துணிகள் நெய்யப்படுகின்றன; நமது நாட்டில் கம்பளி, சட்டை, போர்வை, விரிப்பு முதலியவற்றிற்கு உபயோகப்படுகின்றது. பட்டாடைகள் அழகானவை; விலையுயர்ந்தவை; ஆண்களும் பெண்களும் விரும்பி உடுத்துக்கொள்பவை. நார்களிலிருந்தும் சில ஆடைகள் நெய்யப்படுகின்றன. அவைகளுக்கு நார்ப்பட்டு என்று பெயர்.

ஜனங்கள் இருக்கும் இடத்தையும் அந்த அந்தப் பருவங்களையும் பொறுத்து ஆடைகள் இருக்கவேண்டும். பூமியின் மத்திய ரேகைக்கு இருபுறங்களிலும்

சுமார் ஆயிரத்து ஐந்நூறு மைல் வரையில் வருஷம் முழுதும் உஷ்ணம் கடுமையாக இருக்கும். இதற்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள நாடுகளில் சீதோஷ்ணம் மிதமாக இருக்கும். அப்புறம் உள்ள துருவ நாடுகளில் குளிர் தாங்கமுடியாமல் இருக்கும். இம் மண்டலத்தில் சுமார் ஆறுமாதகாலம் சூரியன் கண்ணிற் படுவது இல்லை.



சீத மண்டல உடைகள் | சம சீதோஷ்ண மண்டல உடைகள் | உஷ்ண மண்டல உடைகள்

பூமி மத்தியிலுள்ள உஷ்ண மண்டலத்தில் கோடைக்காலத்தில் உஷ்ணம் தாங்கவே முடியாது. இக்காலத்தில் எப்போதும் பருத்தி நூலாலாகிய இடுப்புத்துணி மேல்துணி இவைகளைத் தவிர வேறு ஆடைகளின் தேவை இராது. தென் துருவம் வட துருவம் இவைகளை அடுத்த சீத மண்டலத்தில்

எஸ்கிமோ ஜாதி ஜனங்கள் இருக்கிறார்கள். இந் நாடுகளில் குளிர் தாங்கமுடியாது. இவர்களுக்கு உடை, தேக அனலை வெளியே விடாமல் இருக்க வேண்டுமல்லவா ? இவர்கள் நீண்ட மயிர் அடர்ந்த தோல் உடுப்புக்களைத் தேகம் முழுவதும் அணிந்து கொண்டிருப்பார்கள். உடுப்புடன் இருக்கும்போது இவர்கள் கரடியைப்போலக் காணப்படுவார்கள். சமசீதோஷ்ண மண்டலத்திலிருப்பவர்கள் உஷ்ண காலத்தில் பருத்தியினாலும் அல்லது பருத்தி, கம்பளி இரண்டினாலும் நெய்யப்பட்ட உடைகளையும், குளிர் காலத்தில் கம்பளி உடைகளையும் அணிவார்கள்.

ஒவ்வொரு நாட்டினர்க்கும் வேண்டிய ஆடை கள் அவரவர்களுடைய தாய் நாட்டிலேயே கிடைப் பதுதான் மேலானது.

சிறு குழந்தைகளுக்குக் குளிரைத் தாங்குகிற சக்தி மிகக் குறைவு. அவர்களுடைய உடலின் அனல் அற்பக் காரணங்களாலும் வேகமாய்க் குறைந்துபோய்விடும். அனல் குறைந்தால் பல வியாதிகள் உண்டாகும். தகுந்த உடைகளைக் கொண்டு சிறுவர்களைத் தகுந்தபடி காப்பாற்ற வேண்டும். உடுக்கும் உடைகள் தேகத்தில் எந்தப் பாகத்திலும் இறுகாமல் தளர்ச்சியாக இருக்கவேண் டும். இல்லாவிடில் பல தீமைகள் உண்டாகலாம்.

ஈரவஸ்திரங்களுடன் நெடுநேரம் இருக்கக் கூடாது. நம்முடைய தேகத்திலிருந்து எப்பொழுதும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் வியர்வையும் தேகக்

கழிவுகளும் உடுத்திருக்கும் வஸ்திரங்களிலே ஒட்டிக்கொண்டே இருக்கும். ஆகையால், உடைகளை அன்று அன்று துவைத்துச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லாவிடில் சொறி சிரங்கு முதலிய வியாதிகள் உண்டாகும்.

"ஆடையில்லாதவன் அரைமனிதன்."

காங்கை துருவம் மண்டலம்

பயிற்சி :—1. உஷ்ண மண்டலத்திலிருப்பவருக்கு எவ்வித ஆடை சிறந்தது? ஏன்? 2. சிறு குழந்தைகளுக்குத் தேக உஷ்ணம் குறையாமலிருக்க எவ்வித ஆடையை உபயோகிக்கவேண்டும்? 3. துருவ மண்டல வாசிகளின் உடை என்ன?

20. திணை, பால், எண், இடம்

திணை

உபாத்தியாயர் :—பிள்ளைகளே! நீங்கள் நான்காம் வகுப்பில் பெயர்ச்சொல் வினைச்சொற்களைப் பற்றிப் படித்தீர்களல்லவா? இப்பொழுது பெயர்ச் சொற்களின் சில பாகுபாடுகளைப்பற்றித் தெரிந்துகொள்வோம். (ஒரு மாணக்கனைக் குறிப்பிட்டு) சில பெயர்ச் சொற்களைச் சொல்.

மாணக்கன் :—கண்ணன், முருகன், மரம், கல்.

உபா :—இவையெல்லாவற்றையும் ஒரே வகுப்பாகக் கூறலாமா?

மாணு :—கண்ணன், முருகன் இவைகளை உயர்ந்த வகுப்பாகவும், மரம், கல் இவைகளைத் தாழ்ந்த வகுப்பாகவும் கூறலாம்.

உபா :—சரி ; வகுப்பு என்றாலும் சாதி என்றாலும் திணை என்றாலும் ஒன்றுதான். ஆதலால், உயர்ந்த வகுப்பு என்பதை உயர்திணை என்றும், தாழ்ந்த வகுப்பு என்பதை அஃறிணை என்றும் கூறுகிறோம். அஃறிணை = (அல் + திணை) உயர்வல்லாத திணை.

மாணி :—மிருகங்களின் பெயர்களையும் பறவைகளின் பெயர்களையும் எந்தத் திணையிற் சேர்க்க வேண்டும் ?

உபா :—தேவர்களையும் மனிதர்களையும் குறிக்கும் பெயர்கள்மட்டும் உயர்திணை. இவை தவிர மற்ற உயிருள்ள பொருள்களையும் உயிரில்லாத பொருள்களையும் குறிக்கும் பெயர்கள் எல்லாம் அஃறிணை. இப்பொழுது ஒவ்வொரு திணைக்கும் நான்கு நான்கு உதாரணம் கூறு.

மாணி :—சங்கரன், கோபாலன், பார்வதி, சீதை இவை உயர்திணைப் பெயர்ச்சொற்கள்; குதிரை, கிளி, வீடு, மலை இவை அஃறிணைப் பெயர்ச் சொற்கள்.

பால்

உபா :—நல்லது. சங்கரன், கோபாலன், பார்வதி, சீதை இச் சொற்களில் என்ன வேறுபாடு தெரிகிறது ?

மாணி :—சங்கரன், கோபாலன் ஆணின் பெயர்கள்; பார்வதி, சீதை பெண்ணின் பெயர்கள்.

உபா :—ஆணின் பெயர்களை ஆண்பால் என்றும், பெண்ணின் பெயர்களைப் பெண்பால் என்றும் கூறுவது வழக்கம். பலரைக் கூறும்பொழுது எப்படிக் கூறுவாய் ?

மாணி :—பலர்பால் என்று கூறலாமே.

உபா :—சரிதான்; ஆணையினும் பெண்ணையினும் பலரைப்பற்றிக் கூறும்பொழுது பொதுவாகப் பலர்பால் என்றே கூறுகிறார்கள். பலர்பாலுக்குச் சில உதாரணம் கூறு.

மாணி :—தேவர், மனிதர்.

உபா :—அஃறிணைப் பெயர்ச் சொற்கள் சில சொல்லு.

மாணி :—புரு, மண், யானை, கல்.

உபா :—இவை ஒவ்வொன்றும் எந்தப் பாலைச் சேரும் ?

மாணி :—யானை, புரு என்னும் சொற்களில் ஆண் பெண் என்ற பேதம் விளங்கவில்லை. மண், கல் என்பவற்றில் ஆண் பெண் என்ற பேதமே இல்லை. என்ன சொல்வது ?

உபா :—சரிதான்; வித்தியாசம் விளங்கினாலும் விளங்காவிட்டாலும் அஃறிணைப் பெயர்களுக்கு ஆண்பால் பெண்பால் என்று கூறுவதில்லை. ஒன்று, பல என்று கூறுவதுதான் வழக்கம். ஒன்றைத் தெரிவிப்பதை ஒன்றன்பால் எனவும், பலவற்றைத் தெரிவிப்பதைப் பலவின் பால் எனவும் கூறுவது வழக்கம். இப்பொழுது

ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு உதாரணம் கூறு.

மாணு :—யானை, மலை ஒன்றன்பால்; யானைகள், மலைகள் பலவின்பால்.

எண்

உபா :—மற்றொரு விஷயம் கவனி. உயர்திணையாயினும் அஃறிணையாயினும் ஒன்று, பல என்னும் வித்தியாசம் மட்டும் இரண்டுக்கும் பொதுவாக இருக்கிறதல்லவா? இந்த வித்தியாசத்தை மட்டும் காட்ட எப்படிச் சொல்லலாம்?

மாணு :—ஒன்றாயிருப்பதை ஒன்றைத் தெரிவிக்கும் பெயரென்றும், ஒன்றுக்கு மேற்பட்டதைப் பலவற்றைத் தெரிவிக்கும் பெயர் என்றும் கூறலாம்.

உபா :—சரிதான்; அதற்குச் சுலபமானவழி ஒன்றிருக்கிறது. ஒரு பொருளை உணர்த்துவதை ஒருமை என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களை உணர்த்துவதைப் பன்மை என்றும் கூறுவார்கள். எண்ணிக்கையைத் தெரிவிப்பதாதலால் இந்தப் பாகுபாட்டிற்கு எண் எனப் பெயர். இதுவரையில் நீங்கள் பெயர்ச் சொல்லில் என்ன என்ன பாகுபாடுகளைத் தெரிந்து கொண்டீர்கள்?

மாணு :—திணை, பால், எண் இவைகளைத் தெரிந்து கொண்டோம்.

உபா :—கந்தன், சீதை, பெண்கள், பசு, கோழி, கற்கள் இவை ஒவ்வொன்றுக்கும் திணை, பால், எண் ஆகிய இவற்றை விளக்கிக் கூறுக.

இடம்

உபா :—நானும் நீயும் அவனும் போனோம். இவ்வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்கள் யாவை?

மாண :—நான், நீ, அவன்.

உபா :—ஒவ்வொன்றும் யாரைக் குறிக்கின்றது?

மாண:—நான் என்பது பேசுவோனையும், நீ என்பது முன்னிற்பவனையும், அவன் என்பது பேசப் படுபவனையும் தெரிவிக்கின்றன.

உபா :—சரி; பேசுவோன் தன்மை இடத்தையும், முன்னிற்போன் முன்னிலை இடத்தையும், பேசப்படுவோன் படர்க்கை இடத்தையும் தெரிவிப்பதாகக் கூறுவது வழக்கம். இருக்கும் இடத்தைக் குறித்து இப்பாகுபாடு ஏற்படுவதால் இதற்கு இடம் என்றே பெயர். இப் பொழுது முதலில் நான் என்பதற்குத் திணை, பால், எண் கூறு.

மாண :—நான் என்று யாரும் சொல்லக்கூடுமாதலால், அதற்குத் திணை பால் சுலபமாய்க் கூற முடியாதே. நான் என்பது ஒருவனையோ ஒரு பொருளையோ குறிப்பதால் ஒருமை என்று மட்டும் நிச்சயம் கூறலாம்.

உபா :—அதற்குப் பன்மை என்ன ?

மாண :—நாம், நாங்கள் என்பன பன்மை.

உபா :—நீ என்பதற்குத் திணை பால் கூறு.

மாண :—அதற்கும் திணைபால் கூறச் சாத்தியமில்லை. ஒருமை என்று மட்டும் கூறலாம்.

உபா :—அதற்குப் பன்மை என்ன ?

மாண :—நீர், நீங்கள் என்பன பன்மை.

உபா :—சரிதான் ; தன்மை முன்னிலைப் பெயர் களுக்குத் திணை பால் கூறும் வழக்கமில்லை. எண் மாத்திரம் கூறவேண்டும். இப்பொழுது அவன் என்பதைக் கவனி.

மாண :—ஐயா ! இதற்குத் திணைபால் கூறலாம். அவன் என்பது உயர்திணை, ஆண்பால்.

உபா :—அதற்குப் பெண்பால் என்ன ? பலர்பால் என்ன ?

மாண :—அவள் என்பது பெண்பால்; அவர் என்பது பலர்பால்.

உபா :—படர்க்கையிடத்தில் அஃறிணையில் ஒருமைப் பெயர் என்ன ? பன்மைப் பெயர் என்ன ?

மாண :—அது என்பது ஒருமை; அவை என்பது பன்மை.

உபா :—சரிதான்; தன்மை முன்னிலை தவிர மற்றச் சொற்களெல்லாம் படர்க்கை இடத்தைச் சேர்ந்தவை. இப்பொழுது கரும்பலகையில் எழுதியிருப்பதைப் படி.

மாணவர்—		ஒருமை	பன்மை
தன்மை		நான்	நாம், நாங்கள்
முன்னிலை		நீ	நீர், நீங்கள்
படர்க்கை	ஆண் பால்	அவன்	பலர்பால் : அவர்
	பெண் பால்	அவள்	
	ஒன்றன் பால்	அது	பலவின்பால் : அவை

21. தீபாவளி

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் பல உண்டு. எல்லாப் பண்டிகைகளும் எல்லாராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன வென்று சொல்லுவதற்கில்லை. வருஷப்பிறப்புத் தினத்தை ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு நாளில் கொண்டாடுகிறார்கள். தமிழர்கள் சித்திரை மாதம் முதல் தேதியிலும், மலையாளிகள் ஆவணி மாதத்திலும், தெலுங்கு தேசத்தவர்கள் பங்குனி மாதம் சுக்கில பக்ஷம் பிரதமையிலும் வருஷப்பிறப்புத் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். தேசம் முழுதும் ஒரே நாளில் கொண்டாடும் பண்டிகைகளே தேசீயப் பண்டிகைகளாகும். இவை ஏற்பட்டதற்கு விசேஷமான காரணங்களும் உயர்ந்த நோக்கங்களும் இருக்கவேண்டும். இவ்விதமான பண்டிகைகளில் தீபாவளிப்பண்டிகை ஒன்றாகும்.

தீபாவளிப்பண்டிகை சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் உலகம் முழுதுமே கொண்டா

டப்பட்டதாம். இதைக் கொண்டாடும்படியான பாக்கியம் இப்போது இந்தியா ஒன்றுக்குத்தான் இருந்துவருகிறது. இப்பண்டிகையின் விசேஷத்தைப்பற்றி நாம் தெரிந்துகொள்வோம்.

நமது தேசத்தில் பல பாகங்களில் இருப்பவர்கள் தீபாவளியின் வரலாற்றைப் பலவிதமாகக் கூறுகின்றனர். வடஇந்தியாவில் உள்ளவர்கள் ஒரு வகையாகக் கூறுகின்றனர். ஜைனர் ஒரு வகையாகவும், பௌத்தர் ஒரு வகையாகவும் கூறுகின்றனர். தென்னிந்தியாவில் உள்ளவர்கள் கூறுவது பின்வருமாறு :—

பூமிதேவிக்கு நரகன் என்று ஒரு மகன் இருந்தான். அவன் ஓர் அசுரன்; மிகக் கொடியவன்; நல்லோருக்குத் துன்பம் செய்வதே அவனது தொழில். அவன் செய்யும் இடுக்கண்களை ஜனங்கள் தாங்கமுடியாமல் கிருஷ்ணபகவானிடம் சென்று முறையிட்டார்கள். கிருஷ்ணன் அவர்களுக்கு அபயம் தந்து, தான் நரகாசுரனைக் கொன்று அவர்களைக் காப்பதாக வாக்களித்தான்.

நரகாசுரன் தனது மகன் பகதத்தனுக்கு இந்திரனது முடியைக் கொணர்ந்து முடிசூட்ட விரும்பினன். இந்திரனைப் போரில் வென்று, அவனது முடியைப் பறித்துக்கொண்டுவந்து, தனது கருத்தை நிறைவேற்றிக்கொண்டான். இந்திரன் தனது கஷ்டத்தைக் கிருஷ்ணனிடம் முறையிட்டான்.

கிருஷ்ணனுக்குச் சத்தியபாமை என்று ஒரு மனைவி இருந்தாள். அவள் பூமிதேவியின் அம்ச

மாகப் பிறந்தவள்; நரகாசுரனைக் கொல்லத் தானும் உடன்வர அனுமதியளிக்கும்படி கிருஷ்ணனிடம் வேண்டினாள். கிருஷ்ணனும் அவ் வேண்டுகோளுக்கு இணங்கினன். இருவருமாகப் புறப்பட்டுப்போய் நரகாசுரனைப் போரில் வென்று அவனைக் கொன்றனர். இதைக் கேட்ட சகல ஜனங்களும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். இந்த வெற்றியின் ஞாபகார்த்தமாக அன்று ஜனங்கள் எண்ணெயிட்டு ஸ்நானம் செய்தார்கள்; இரவில் ஊர் முழுவதும் தீபங்களால் அலங்கரித்தார்கள்; சொக்கப்பனை கொளுத்தினார்கள். இதுவே தீபாவளி சம்பந்தமான புராணக் கதை.

இப் பண்டிகைத்தினத்துக்குப் பல நாட்கள் முந்தியே எல்லாவகைக் கடைகளிலும் பலவிதச் சாமான்கள் புதியவைகளாக வந்து குவிந்திருக்கும். ஜனங்கள் இரண்டொரு நாட்கள் முந்தியே கடைகளுக்குச்சென்று அவரவர்களுக்கு விருப்பமான வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள் முதலியவற்றையும், பக்ஷணங்களுக்கு வேண்டிய பண்டங்களையும், குழந்தைகளுக்குவேண்டிய சீன வெடித் தினுசுகள், வாணங்கள் முதலியவற்றையும் வாங்கிக்கொண்டு வருவார்கள்.

இப்பண்டிகை எப்பொழுதும் ஐப்பசி மாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியன்று வரும். அன்றிரவு பின் மாலையில் சிறியோர், பெரியோர், ஆண், பெண், ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமின்றி எல்லாரும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு வெந்

நீரில் ஸ்நானம் செய்வார்கள். எண்ணெயில் இலக்குமியும் வெந்நீரில் கங்கையும் இருப்பதாகச் சொல்லுகின்றனர். பிறகு, அவரவர் குலாசாரப்படி நெற்றிக்கிட்டுப் புது ஆடை அணிவார்கள்; பிறகு, பக்ஷணங்களைத் தின்பார்கள். பெரியவர்கள் அயல் வீடுகளுக்குப் போய் ஒருவரை ஒருவர் "கங்கா ஸ்நானம் ஆயிற்றா?" என்று சந்தோஷமாய் விசாரிப்பார்கள். சிறுவர்கள் சீன வெடி சுட்டுக் களிப்பார்கள். செல்வவான்கள் தம் உறவினர்க்கும் சினேகிதர்க்கும் நல்ல வஸ்திரங்களை வாங்கிச் சம்மானம் செய்வார்கள்; வேலைக்காரர்களுக்கும் யாசகர்களுக்கும் அவரவர் தகுதிப்படி இனம் கொடுப்பார்கள்.

இடுக்கண்	அபயம்	முடிசூட்ட
ஆரவாரம்	சொக்கப்பனை	சீனவெடி

பயிற்சி :—1. தேசீயப் பண்டிகை என்பது என்ன? 2. தீபாவளி சம்பந்தமாகத் தென்னிந்தியர் கூறும் வரலாறு என்ன? 3. தீபாவளி தினத்தில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்வதன் நோக்கம் என்ன? 4. தீபாவளிப் பண்டிகை யாருடைய ஞாபகார்த்தமாகக் கொண்டாடப்படுகிறது?

22. ஸைவிங்க்ஸ் பாங்கி (சம்பாஷணை)

சுந்தரம் :—அப்பா! எங்கே போயிருந்தீர்கள்?

தகப்பனார் :—சுந்தரம்! நான் பணம் வாங்கி வரத் தபாலாபீசுக்குப் போயிருந்தேன்.

சு :—பணம் ஏது? மணியார்டரானல் வீட்டிலேயே கொண்டுவந்து கொடுக்கமாட்டார்களா?

த :—தபாலாபீசில் ஸேவிங்க்ஸ் பாங்கில் பணம் போட்டிருக்கிறேன். அதிலிருந்து இருபது ரூபாய் வாங்கி வந்தேன்.

சு :—"ஸேவிங்க்ஸ் பாங்கி" என்பது என்ன?

த :—நமது கையில் பணம் மிச்ச மிருந்தால் அதைத் தபாலாபீசில் கொடுத்து நமக்காக வைத்து வைக்கச் சொல்லலாம். அங்கே நம்முடைய கணக்கில் வரவு வைத்துக்கொள்வார்கள்; நாம் வேண்டும் போது வாங்கிக்கொள்ளலாம். இந்தக் கணக்குக்கு ஸேவிங்க்ஸ் பாங்கிக் கணக்கு என்று பெயர். பணம் நம்மிடம் இருந்தால் அதை ஜாக்கிரதையாகக் காப்பாற்றவேண்டும். பாங்கில் போட்டு வைத்திருந்தால் பத்திரமாயிருக்கும்.

சு :—எப்பொழுது வேண்டுமானலும் பணம் போடலாமா? எப்பொழுது வேண்டுமானலும் வாங்கலாமா?

த :—தபாலாபீசில் வேலைநாட்களில் குறித்த நேரத்தில் நாம் பணம் கொண்டுபோய்க் கட்டலாம். எத்தனை தடவை வேண்டுமானலும் கட்டலாம். ஆனல், நாம் வாங்கவேண்டுமானல் ஒரு வாரத்துக்கு ஒரு தடவைதான் வாங்கலாம். சனிக்கிழமை பணம் வாங்கினல் மறு திங்கட்கிழமையும் வாங்கலாம்.

சு :—இது மிகவும் அனுகூலமானது தான்.

த :—ஆம்; தபாலாபீசார் பணத்தை நமக்கா

கப் பத்திரமாகக் காப்பாற்றி வைத்துத் தருகிறார் கள். நமக்குப் பணம் வேண்டுமென்றால் தாமத மில்லாமல் போய் வாங்கிக் கொள்ளலாம். பணம் கையிலிருந்தால் அடிக்கடி செலவழிந்து போகுமாத லால் இந்தப் பாங்கில் போட்டு வைப்பது நல்லது. நாம் போட்டு வைக்கும் பணத்துக்குக் கொஞ்சம் வட்டியும் கிடைக்கும்.

சு :—நாம் தபாலாபீசில் கட்டிவைத்திருக்கும் பணத்துக்கு ஆதாரமென்ன ?

த :—நாம் கட்டும் தொகையை அவ்வப்போது ஒரு புத்தகத்தில் பதிந்து தருவார்கள். இப்புத்தகத் துக்கு "ஸேவிங்க்ஸ் பாங்கிப் பாஸ் புஸ்தகம்" என்று பெயர். அதில் மொத்தம் நமது பணம் தபாலாபீசில் எவ்வளவு இருக்கிற தென்பதையும் காட்டியிருக்கும். நாம் பணம் வாங்கும்போதும் அதைக் கழித்து மிகுதி இவ்வளவென்று கணக்கிட் டுத் தருவார்கள். ஒவ்வொரு தடவையும் அதில் குறிக்கும் போது தபாலாபீசின் தேதி முத்திரை யைப் போட்டுத் தருவார்கள். அடுத்த தடவை நான் தபாலாபீசுக்குப் போகும்போது உன்னையும் அழைத்துக்கொண்டு போவேன். எப்படிப் பணம் போடுவது, எப்படிப் பணம் வாங்குவது இவற்றைப் பற்றி நீ நேரில் தெரிந்து கொள்வாய்.

பயிற்சி :—பணம் ஸேவிங்க்ஸ் பாங்கில் போடுவது எப் படி? பணம் வாங்குவது எப்படி? (இவைகளைப் பிள்ளைகள் நேரில் தெரிந்துகொள்ளச் செய்யலாம். பணம் வாங்குவதற்கு உண்டான மனுவைப் பிள்ளைகளுக்குக் காட்டலாம்.)

23. வண்ணத்திப் பூச்சி

வண்ணத்திப் பூச்சியைப் பார்த்து உலகத்தில் ஆச்சரியப் படாதவர்கள் எவரும் இரார். வசந்த காலம் பிறந்தவுடன், புஷ்பித்திருக்கும் செடிகளினிடம் கொஞ்சமேனும் ஆயாசமின்றி, அவை இங்கும் அங்கும் உல்லாசமாகப் பறப்பதை நாம் காணலாம். வண்ணத்திப் பூச்சிகள் பல நிறமுள்ளவை. ஒவ்வொன்றும் கண்ணைக் கவரும் அழகுவாய்ந்தவை.

வண்ணத்திப் பூச்சியின் உடல் மெலிந்து நீண்டு உருண்டிருக்கிறது. அதன் இறக்கைகள் அழகாக வர்ணங்கள் அமையப்பெற்று அகன்று இருக்கின்றன. மார்பும் வயிறும் முட்டை வடிவமானவை. கண்கள் பருத்து உருண்டையானவை.


வண்ணத்திப் பூச்சி பறப்பது மிக வேடிக்கையாக இருக்கும். அது ஒரு பறவையைப்போல நேராகப் பறப்பதில்லை. இங்குமங்கும் வளைந்து வளைந்து போகும். ஒரு சமயம் உயரப் பறந்து செல்லும். அடுத்த சமயம் கீழே இறங்கும். நாம் எதிர்பாராதவண்ணமெல்லாம் நினைத்தபடி கோணலாகத் திரும்பும். பல சமயம் வண்ணத்திப் பூச்சியைப் பிடிக்கச் சிறுவர்கள் அதன் பின் போய்க் கொண்டிருப்பார்கள். அது ஓர் இடத்தில் உட்கார்ந்தவுடன் அதன் அருகில் மெதுவாகச் சென்று அதனைப் பிடிக்கத் தங்கள் கையை நீட்டுவார்கள்; பின்னும் ஓர் இமைப்பொழுதில் தங்கள் கையில் அது அகப்பட்டுவிடுமென்று எண்ணிச் சந்தோஷப்

படுவார்கள். ஆனால், அது இவர்களை ஏமாற்றி விட்டுத் திடீரென்று பறந்து கண்ணுக்கு எட்டாத தூரம் போய்விடும்.

எறும்புக்கும் கறையானுக்கும் இருப்பதுபோல வண்ணத்திப் பூச்சிக்குக் கடித்து உண்ணுதற்கு வாயில்லை. இதற்கு அவ்வித வாய் எதற்கு? எறும்பும் கரையானும் தங்கள் ஆகாரத்தை வாயினல் கடித்து அருந்தவேண்டும். வண்ணத்திப்பூச்சிக்கோ அவ்வித வேலை இல்லை; தேனீயைப்போல் இதன் ஆகாரம் புஷ்பரசம் அல்லவா? ஆகையால், தன் ஆகாரத்தை உண்ணத் தக்கவாறு அதன் வாய் அமைந்திருக்கிறது. அது ஆகாரத்தை உறிஞ்சத் தான் தகுதியுள்ளது; அது நீண்ட குழாய் போன்றது; அதற்குத் துதிக்கை என்று பெயர்; அதனை வண்ணத்திப் பூச்சி வாயின் அடிப்பக்கமாகச் சுருட்டி வைத்துக்கொண்டிருக்கும். அது, கவனித்துப் பார்த்தால்தான் தெரியும். புஷ்பங்களிலுள்ள இனிப்பான தேனைப் பருக அவற்றின்மீது உட்காரும்பொழுது, இந்த நீண்ட துதிக்கையைப் பிரித்துப் புஷ்பரசம் எட்டுகிறவரையில் அதனுள் செலுத்தி அந்த ரசத்தைக் குடிக்கும்.

வண்ணத்திப் பூச்சியின் நீண்ட மெலிந்த கால்கள் நடக்க உதவுகிறதில்லை. அது ஒரு புஷ்பத்தின் மேல் உட்கார்ந்திருக்கும்போது காற்றடித்தால் தன் கால்களால் அப்புஷ்பத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்ளும். அப்பொழுது காற்று அதை அடித்துக்கொண்டுபோக முடிகிறதில்லை.

அதற்குக் கால்களைவிட அதிகமாக உபயோகப்படுவது அதன் இறக்கைகளே. உட்கார்ந்திருக்கும்போது தவிர, மற்ற நேரமெல்லாம் பறந்து கொண்டுதான் இருக்கும். அதன் மிருதுவான நான்கு இறக்கைகளும் பெரியவை; பிரகாசமான நிறமுள்ளவை. அது உட்கார்ந்திருக்கும்போது அதன் இறக்கைகள் முதுகின் மேற்பக்கமாகச் சேர்ந்து செங்குத்தாக இருக்கும். அவைகளின் மேற்பக்கத்தைக் கையால் தொட்டால் அவற்றிலி



ருக்கும் தூசிகள் கையில் ஒட்டிக்கொள்ளும். இவற்றை அணுதர்சினியினால் பார்க்க ஒவ்வொன்றும் ஒரு செதிலாக இருப்பதைக் காணலாம். இச் செதில்கள் இறக்கைகளின்மேல் ஒன்றன்மேலொன்று படிந்து வரிசையாக மூடிக்கொண்டிருக்கும். இவை பல நிறமுள்ளவை. இவைகளே இறக்கைகளுக்குப் பற்பல நிறங்களைத் தருகின்றன.

பெண் வண்ணத்திப் பூச்சி இலைகளின் அடிப்பக்கத்தில் முட்டையிடும். இதனால் முட்டைகள்

மழை வெயிலினின்றும் காப்பாற்றப்படுவதன்றிச் சத்துருக்களும் இவற்றைப் பார்க்கமுடியாது. சில நாட்கள் சென்று அங்கே பார்த்தால் முட்டைகள் இருந்த இடத்தில் கம்பளிப்புழு நிறைந்திருப்பதைக் காணலாம். இவற்றிற்குக் கால்கள் இருக்கும். வண்ணத்திப் பூச்சிகளுக்குள்ள பழக்க வழக்கங்களில் ஒன்றுகூட இவற்றுக்கு இராது. இவை இலைகளை வெகு ஆவலுடன் பரபரப்பாகத் தின்று வளரும்; பெரிதாகப் பெரிதாக, தோலுரிக்கும். தோலுரிக்கும்போதெல்லாம் நிறம் மாறும். உருவமும் பெரிதாகும். இப்படி ஐந்து தடவை தோல் உரிக்கும். இதற்குப் பதினைந்து நாட்கள் பிடிக்கும். இதற்குள் புழு முழுவளர்ச்சியை அடையும்; ஆகாரம் தின்பதை நிறுத்திவிடும். இன்னும் ஒரு தடவை தோலுரிக்க ஆரம்பிக்கும். இலையின் ஒரு முனையில் தான் நூற்கும் நூலினால் சிறு கூண்டு ஒன்றைச் செய்து ஒட்டவைக்கும். அதனைத் தன் வால் பக்கத்திலுள்ள பொய்க் காலின் நகத்தினால் பற்றிக் கொண்டு தலைகீழாகத் தொங்கும். பிறகு, தோல் வெடித்து உருவம் முழுதும் மாறிவிடும். அதன்மேல் பொன்னிறமான கோடுகள் இருக்கும். இதற்குக் கால்கள் இல்லை; கண்களும் இல்லை; வாயும் இல்லை. சுவாசத் துவாரங்கள் மாத்திரம் தெரியும்.

இவ்வளவு விந்தையான ஐந்து அசைவில்லாமலும் ஆகாரமில்லாமலும் தூங்குவதுபோல் ஆறு நாட்கள் இருக்கும். பிறகு, மேல்தோல் வெடித்து எல்லா அவயவங்களும் அமையப்பெற்று ஒரு பெரிய

பூச்சியாக வெளியே வரும்; சில நிமிஷங்கள் அங்கு மிங்கும் மெதுவாக நடக்கும்; பிறகு, அதன் இறக்கைகள் விரிந்து உறுதிப்படும்; உடனே, புது உணர்ச்சியுடனும் புதுச் சுபாவங்களுடனும் புஷ்பங்களிலுள்ள தேனை உண்டு உல்லாசமாய்ப் பறந்து செல்லும்.

வசந்தம் ஆயாசம் இமைப்பொழுது
அணுதர்சினி கூண்டு உல்லாசமாய்

பயிற்சி:—1. கம்பளிப்பூச்சி என்பது யாது? அது வண்ணத்திப் பூச்சியாவது எப்படி? 2. வண்ணத்திப் பூச்சி எப்படித் தன்னுடைய சத்துருக்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளும்? 3. வண்ணத்திப் பூச்சிக்குத் துதிக்கை அமைந்திருப்பதன் காரணம் என்ன? 4. வண்ணத்திப் பூச்சியின் இறக்கைகளின் அமைப்பைப்பற்றிச் சுருக்கி எழுதுக.

24. பச்சையப்பர்

கடவுளது படைப்பில் மனிதராகப் பிறத்தல் அரிது. மனிதப்பிறவியில் பிறந்தாலும், முயற்சியுள்ளவராகவும் பொருளுள்ளவராகவும் அமைதல் அதனிலும் அரிது. அதைக்காட்டிலும் அருமையானது தருமம் செய்பவராகப் பிறத்தல். இதனாலே தான் உலகம் தருமம் செய்பவர்களை மிகவும் கொண்டாடுகின்றது.

நமது நாட்டில் பல தருமவான்கள் உண்டு. பல தருமஸ்தாபனங்களும் உண்டு. தருமத்தினாலே தான் புகழ்பெற முடியும் என்பதையும், புகழ் ஒன்றுதான் எந்நாளும் அழியாது நிலைத்திருக்கும் என்ப

தையும் நமது நாட்டுப் பெரியோர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

நமது நாட்டிலே பல பெரியோர்கள் தேவாலயங்களையும் அன்ன சத்திரங்களையும் கட்டியிருக்கிறார்கள். வேறு பலர் பள்ளிக்கூடங்களையும் வைத்திய சாலைகளையும், அமைத்திருக்கின்றனர். சிலர் தண்ணீர்ப் பந்தல்கள், கிணறுகள், சாலைகள், சோலைகள் முதலியவற்றை அமைத்திருக்கின்றனர். இவற்றை அல்லாமல் நூற்றுக்கணக்கான மானியங்களும் கட்டளைகளும் ஆங்காங்குள்ள தேவாலயங்களுக்கு விடப் பட்டுள்ளன. தேதியர்களுக்கு விடப்பட்ட தரும சொத்துக்களும்பல.



இப்படிப்பட்ட பல தருமகாரியங்களைச் செய்து அழியாப்புகழ் படைத்தவர்களுள் முதன்மையானவர் பச்சையப்ப முதலியார். இவர், கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் காஞ்சீபுரத்தில்

வேளாளர் குலத்தில் பிறந்தார். இவர் பிறப்பதற் குச் சில மாதங்களுக்கு முன்னமே இவருடைய தந்தையாராகிய விசுவநாத முதலியார் காலஞ்சென் ரூர். இவருடைய தாயாரின் பெயர் பூச்சியம்மாள். பச்சையப்பமுதலியாருக்குச் சகோதரிமார் இருவர் இருந்தனர்.

பூச்சியம்மாள், கணவரை இழந்து பெரிதும் வருந்தினர்; பெரியபாளையம் என்னும் ஊரில் தங்க ளது குடும்பத்திற்கு நண்பராயிருந்த ரெட்டிராயர் என்னும் அந்தணர் இருப்பதை அறிந்தவராதலின், தம்முடைய மூன்று குழந்தைகளுடன் அவ்வூருக்குச் சென்ரூர்; ரெட்டிராயரது ஆதரவில் இருந்து வந் தார். பச்சையப்பருக்கு ஐந்து வயதாகும் சமயத் தில் ரெட்டிராயரும் இறந்தார். தங்களை அன்பாக வும் மரியாதையாகவும் பாதுகாத்துவந்த ராயர் இறந் ததை எண்ணிப் பூச்சியம்மாள் மிகவும் வருந்தினர்; எங்கே தங்களை கவலையற்றிருக்கலாம் என்று ஆலோசித்து, சென்னபட்டணத்திற்குச் சென்ரூர். அங்கே நாராயணசாமிபிள்ளை என்ற ஒரு யாதவப் பிரபு இருப்பதை அறிந்து அவரை அடைந்தார்; அங்கே தம்முடைய குழந்தைகளுடன் வாழ்நாளைக் கழித்து வந்தார். நாராயணசாமி பிள்ளையும் பூச்சி யம்மாளைத் தமது சகோதரியாகவே மதித்துப் பாது காத்துவந்தார்.

பெரியபாளையத்தில் இருக்கும்பொழுது, பச்சை யப்பருக்குத் தெலுங்கு பாஷையிலே பேசவும் எழு தவும் தெரிந்திருந்தது. சென்னைக்கு வந்த பிறகு

அவர் ஆங்கில பாஷையைப் பேசவும் கற்றுக் கொண்டு, தரகராகப் பழகி வந்தார். சிறிது காலத் திற்குள் தரகுத்தொழிலில் சிறந்தவராகி, நிக்கோ லஸ் என்னும் வர்த்தகரிடத்தில் துபாஷாக அமர்ந் தார். இரண்டு மொழிகளில் பேசுபவர் 'துவிபாஷி' என்று சொல்லப்படுவார். துவிபாஷி என்பது துபாஷி என்றும் துபாஷ் என்றும் சொல்லப்படு கிறது. நாளடைவில் பச்சையப்பர் பிரசித்திபெற் றவர் ஆனர்.

இங்கிலையில், நமது தேசத்திலே ஆங்கிலேயரது அதிகாரம் தோன்றியது. அவர்களுக்குப் பல இடங்களில் நிலவரிகளை வசூல்செய்ய வேண்டியிருந் தது. அதன்பொருட்டுப் பச்சையப்பர் ஆங்கில அதிகாரிகளால் செங்கற்பட்டு ஜில்லாவின் நில வரியை வசூல் செய்பவராக நியமிக்கப்பட்டார். சில நாட்களுக்குப் பிறகு பச்சையப்பர் கர்நாடக ராஜ்யத்தில் உத்தியோகஸ்தராக இருந்த ஸலிவன் என்பவரிடம் துபாஷியாக வேலைபார்த்தார். அவ ரிடத்தில் வேலை பார்க்கும் பொழுது பச்சை யப்பருக்குப் பெரும் பொருள் சேர்ந்தது. இப்படி யாக, ஆங்கிலத் துரைத்தனத்தாருக்குத் தஞ்சை மன்னரிடமிருந்து கப்பத்தொகையை வசூல்செய்யத் தகுந்த ஒருவர் வேண்டியிருந்தது. அந்த வேலையும் பச்சையப்பருக்கே கிடைத்தது. அதனால், சிலகாலம் தஞ்சாவூரிலும் வரிவசூல் செய்பவராக இருந்தார்.

பச்சையப்பர், தமது தமக்கையாரின் மகளா கிய ஐயம்மாள் என்பவரை மணம் புரிந்துகொண்

டார்; 'சுற்றத்திற்கழகு சூழ இருத்தல்' என்றபடி, பலரையும் ஆதரித்து வந்தார்; தமக்குக் கிடைத்த பொருளைக் கடவுள் தந்த கொடையாகக் கருதினர்; 'காயாத மரம் போலவும், வறண்ட குளம் போலவும் பிறர்க்குப் பயன் படாமல் போகலாகாது' என்று கருதிப் பல தருமச் செயல்களையும் செய்யலானர்.

நமது நாட்டை ஆண்ட அரசர்களின் செய்கைகளும் பெரியோர்களின் உபதேசங்களும் பச்சையப்பருக்கு நல்ல துணையாயின. அவற்றால், பச்சையப்பர் காஞ்சிபுரம் இராமேசுவரம் வரையிலுள்ள பல தேவாலயங்களிலே கட்டளைகளை அமைத்து யாத்திரிகர்களுக்கு உணவு அளிக்குமாறு செய்தார்; பல இடங்களிலே வீடுகளைக்கட்டிப் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கினர்; அவை இனிது நடைபெறும் பொருட்டுப் பெரும்பொருளை மூலதனமாக வைத்தார். இவர் அளித்த சொத்துக்களின் வரும்படியிலிருந்து இவர் நடத்திவந்த தருமங்களும் வேறு பல தரும காரியங்களும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. சென்னையிலுள்ள பச்சையப்பன் காலேஜ் ஒன்றும், காஞ்சீபுரத்திலும் சிதம்பரத்திலுமுள்ள பச்சையப்பன் ஹைஸ்கூல்கள் இரண்டும் குறிப்பிடத்தக்கன. அவை 'பச்சையப்பன் தரும ஸ்தாபன நிர்வாக சபை' என்ற ஒரு சபையினரால் நிர்வகிக்கப்படுகின்றன. அந்தச் சபையில் பல கனவான்கள் அங்கத்தினராக நியமிக்கப்படுகிறார்கள்.

பல சிறந்த புண்ணிய காரியங்களைச் செய்து பெரும் புகழ் படைத்த பச்சையப்பர் நமது தேசத்தினர் செய்த தவக்குறைபோலத் தமது நாற்பதாவது வயதிலேயே என்றும் அழியாப் புகழுடம்பை நிலைநிறுத்தி இந்தப் பொய்உடலை விட்டார். உலகினர் என்றும் கொண்டாடும்படி பல தருமகாரியங்களைச் செய்தமையால், இறந்தும் இருப்பவராகவே கொண்டாடப்படும் பச்சையப்பருடைய புகழ் மிகப் பெரிது.


"ஈவார்மேல் நிற்கும் புகழ்"
"தோன்றில் புகழொடு தோன்றுக"

தரகர் *துபாஷ்* *யாத்திரிகர்*

பயிற்சி:—1. இறந்தும் இறவாதவர்போல விளங்குபவர் யார்? உதாரணங்களுடன் விளக்குக. 2. பூச்சியம்மாள், கணவர் இறந்த பிறகு எவர் எவர்களுடைய ஆதரவில் இருந்து வந்தார்? 3. பச்சையப்பர் ஸ்தாபித்த தர்மங்கள் யாவை? அவை இப்பொழுது எப்படி நிர்வாகம் பண்ணப்பட்டு வருகின்றன?

25. நமது உடல்

நமது உடல் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை, தலையும் முண்டமும் கை கால்களுமாம். தலையையும் முண்டத்தையும் சேர்க்கும் பாகத்திற்குக் கழுத்து என்று பெயர். இந்தக் கழுத்து, தலையைத் தாங்கி நிற்பதுடன் எப்பக்கமும் வளையத்தக்கதாகவும் இருக்கிறது.



நாம் தரையின்மேல் நிற்பதால் நம் முடைய சரீரம் உறுதியாயும் பலுவாயும் இருக்கவேண்டும். நமது உடலுக்குள்ளிருக்கும் எலும்புக் கூட்டினால் இவ்வழுத்தமான சரீரம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இக்கூட்டினாலேதான் தேகத்திற்கு உருவமும் வலிமையும் ஏற்பட்டிருக்கின்றன. இக்கூடு அழுத்தமான ஒரே எலும்பினால் ஆக்கப்பட்டதன்று; பல துண்டெலும்புகளால் ஆக்கப்பட்டது. இவைகள் மூட்டுக்களில் இணைக்கப்பட்டு வேண்டிய வாறு அசையும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன.

தேகத்திற்கு முக்கியமான ஆதரவு முது

கெலும்பேயாகும். இது முண்டத்தின் உச்சிமுதல் அடிவரையில் நீண்டிருக்கிறது. இது ஓர் இருப்புச் சங்கிலித் தொடர்போல் இருக்கிறது. இதில் பல எலும்புகள் ஒன்றன்மேலொன்றுகச் சரிவரப் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதம் பொருத்தப்பட்டிருப்பதால் மனிதர்கள் குனியவும் நிமிரவும் திரும்பவும் அசையவும் சாத்தியப்படுகிறது.

இவ்வெலும்புகள் ஒவ்வொன்றின் நடுவிலும் துவாரம் இருக்கிறது. இத்துவாரங்களெல்லாம் ஒன்றன்மேலொன்றாய் ஒழுங்காய்ப் பொருந்தியிருப்பதால், இம் முதுகெலும்புக்குள் ஒரு நீண்ட குழாய் போன்ற பாகம் ஏற்படுகிறது. இதற்கு முள்ளந் தண்டுக்குழாய் என்று பெயர்.

தலையிலுள்ள அறைக்குள் இருப்பது மூளை. இது சரீர உறுப்புக்களுள் முக்கியமானது. மூளையே மனிதனின் சகல முன்னேற்றத்திற்கும் காரணமானது. ஆகையாலேதான், அது, சரீரத்திற்குள் உயர்ந்த இடமாகிய தலையில் வலிமையான எலும்புகளால் மூடப்பட்ட அறைக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறையில் முதுகெலும்பிற்குள்ளிருக்கும் முள்ளந்தண்டுக் குழாய்வந்து சேருகிறது. மூளையிலிருந்து ஒரு கிளை பிரிந்து முள்ளந்தண்டுக் குழாயின் கோடிவரையில் போகிறது. இதற்கு "ஸ்பைனல் கார்டு" என்று பெயர். இதிலிருந்தும் மூளையிலிருந்தும் பல நரம்புகள் பிரிந்து, அவை கண்ணுக்குத் தெரியாத சன்னமான நரம்புகளாகி உடம்பு முழுவதும் பரவியிருக்கின்றன. இவைகளின் உதவி

யால் சரீரத்தில் உணர்ச்சி ஏற்படுகிறது.

தலைப்பாகத்தில் கண்களும் காதுகளும் நாசித் துவாரங்களும் வாயும் அதனுள் நாக்கும் அமைந் திருக்கின்றன. மனித சரீரத்தின் முண்டம் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; மேலிருக் கும் பாகத்தில் முள்ளந்தண்டின் பெரும்பாகம், விலாவெலும்புகள், மார்பெலும்புகள் முதலியவை அடங்கியிருக்கின்றன. இவ்வறையிலேதான் சுவா சாசயம், இருதயம், மிகப் பெரிய இரத்த நாடிகள், நாளங்கள் முதலியவைகளும் இருக்கின்றன. முண் டத்தின் கீழிருக்கும் பாகத்தில் இரைப்பை, ஈரல், சிறுகுடல், பெருங்குடல் முதலியவை இருக்கின்றன.

நாம் மூச்சுவிடாமல் ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது. நாம் அடிக்கடி பிராணவாயுவை உட் கொண்டும் கரியமில வாயுவை வெளிப்படுத்திக் கொண்டும் இருக்கிறோம். காற்றிலிருக்கும் பிராண வாயுவை நாம் அடிக்கடி உட்கொண்டேயிருப்பதால், நம் தேகத்தில் உஷ்ணம் ஏற்பட்டு எங்கும் பரவு கிறது. நாம் உட்கொள்ளும் பிராணவாயு சுவாசா சயத்தில் போய்ச் சேருகிறது. இங்கே தேகத்தி லுள்ள கெட்ட இரத்தமெல்லாம் நல்ல இரத்தமாக மாறி இருதயத்தில் வந்து சேருகிறது.

இங்கிருந்து சுத்தமான சிவந்த இரத்தம் தேகத் தின் பல பாகங்களுக்கும் இரத்தக் குழாய்களின் மூலமாகச் செல்லுகிறது. இருதயம் ஒழுங்காகச் சுருங்கி விரிவதால் தேகத்தில் இரத்த ஓட்டம் சரியாய் நடைபெறுகிறது.

நாம் உட்கொள்ளும் ஆகாரம் வாயில் ஊறும் உமிழ்நீருடன் கலந்து பற்களால் நன்றாக அரைக்கப்பட்டுத் தொண்டை வழியாக இரைப்பையை அடைகிறது. இங்கே இது வேறு சில ஜீர்ண நீர்களுடன் கலந்து அரைபட்டு ஒருவகைக் கஞ்சிபோல மாறுகிறது. பிறகு, இது குடலுக்குள் போகிறது. இங்கே இதுவரையில் ஜீர்ணமாகாத சில பொருள்களும் ஜீர்ணமாகின்றன. பிறகு, இதில் சத்துள்ளது மட்டும் இரத்தத்துடன் கலக்கிறது. ஜீர்ணமாகாத திப்பிகள் மலமாக வெளியே தள்ளப்படுகின்றன.

நாம் உட்கொள்ளும் ஆகாரத்தில் சரீரத்திற்கு வேண்டுவனவெல்லாம் இரத்தத்தோடு கலந்த பிறகு, தேகத்திலும் பல கழிவுப்பொருள்கள் தங்குகின்றன. இவை தேகத்திலிருந்து பல வழிகளால் வெளிப்படுகின்றன. இவ்வாச்சரியப்படத்தக்க சரீரத்தைத் தன் வேலையைத் தானே செய்துகொள்ளும்படி அமைத்த கடவுளின் பெருமையே பெருமை!

சாதகமாக முண்டம் சுவாசாசயம்
எலும்புக்கூடு இருதயம் பிராணவாயு

பயிற்சி :—1. தலையை முண்டத்தோடு சேர்ப்பது எது? அது எவ்விதம் அமைந்திருக்கிறது? 2. முள்ளந்தண்டு ஒரே எலும்பால் ஆக்கப்படாததன் காரணம் என்ன? 3. அசுத்த இரத்தம் எங்கே சுத்தமடைகிறது?

26. பழமொழிகள்

1. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
2. ஆடை இல்லாதவன் அரை மனிதன்.
3. இட்டாருக்கு இட்ட பயன்.
4. ஈனரை அடுத்தால் மானம் அழியும்.
5. உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்.
6. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
7. எருது நோய் காக்கைக்குத் தெரியுமா ?
8. ஏழை அழுத கண்ணீர் கூரியவாள் ஒக்கும்.
9. ஐந்தும் மூன்றும் அடுக்காய் இருந்தால் அறியாப் பெண்ணுங் கறியாக்குவாள்.
10. ஒருமைப்பாடு இல்லாதகுடி ஒருமிக்கக் கெடும்.
11. ஓர் ஊருக்கு ஒரு வழியா ?
12. ஔவியம் பேசுதல் எவ்விதமும் கெடும்.
13. கண்ணில் கண்டது கோடி, காணாதது அனந்தங்கோடி.
14. கால கதியை யாருங் கடக்க மாட்டார்கள்.
15. குந்தி யிருந்து தின்றால் குன்றும் மாளும்.
16. கெட்டிக்காரன் பொய் எட்டு நாளில் தெரியும்.
17. கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே.
18. கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர்.
19. கொட்டிக் கிழங்கும் ஒரு முட்டுக்கு உதவும்.
20. தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்.

அரும்பதை உரை

5. உற்றது—உண்மையாய் நடந்தது.
7. நோய்—வருத்தம்.
8. கூரிய—கூர்மையான.
10. ஒருமைப்பாடு—ஒற்றுமை.
12. ஒளவியம்—பொறுமைச் சொற்கள்.
13. அனந்தம்—முடிவில்லாதது, பல.
15. குன்று—மலை.
19. முட்டு—தட்டுப்பாடு.
20. கலிவன்—கடவுள்.

27. வாக்குண்டாம்

(ஒளவையார்)

1. நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
களரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருக லால். (1)

2. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். (2)

3. அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—கொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (3)

4. நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம். (4)

5. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. (5)

6. தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. (6)

7. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுல
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு [கில்
எல்லார்க்கும் பெய்யும் மழை. (7)

8. பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்
விண்டுமி போனல் முளையாதாம்—கொண்ட
ஆற்றல் உடையார்க்கும் ஆகாதளவின்றி [பேர்
ஏற்ற கருமம் செயல். (8)

9. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்ரூன் குறிப்பறிய
மாட்டா தவன் நன் மரம். (9)

10. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. (10)

11. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பார் அறிவுடையோர்—மாந்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து [தார்
மறைக்குமாம் கண்டீர் மரம். (11)

12. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்
—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடம் எல்லாம் சிறப்பு. (12)

28. நல்வழி

(ஔவையார்)

13. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலுலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (1)

14. ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (2)

15. பெற்றூர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றூர் உகந்தா ரெனவேண்டார்—மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தான். (3)

16. ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளுஞ் ஏழ்பிறப்பும் தீயுஞ்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு. (4)

17. மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை-சுரந்தமுதம்
கற்றூ தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றூர் உலகத் தவர். (5)

18. ஆறிடு மேடு மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து. (6)

19. கல்லானே யானலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லா
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த [ஈன
தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். (7)

20. பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தா லுநன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தா லுந்தோன்று துணர்வு. (8)

29. நீதி வெண்பா

21. கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி ஏழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
அனந்தம் தவத்தால் அருள்ஞானம்பெற்றோர்க்
கனந்தம் விழியென் றறி. (1)

22. செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்ற மறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். (2)

23. ஈக்கு விடம்தலையில் எய்துமிருந் தேனுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே-நோக்கரிய
பைங்கணரவுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே ஆம். (3)

24. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூரம் ஆமோ கடலுப்புப்—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்
தாம்
புண்ணிய ராவாரோ புகல். (4)

25. பொற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலி
னோர்
நற்புதல்வ னேப்பெறுதல் நன்றுமே
—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததினல் ஏதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது. (5)

26. பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்
—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்
பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (6)

27. தீயவர்பாற் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க
—சேயிழையே
தண்ணெளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு. (7)

28. மனம்வேறு சொல்வேறு மன்னு
தொழில்வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு
மொன்றே
கனமொன்று மேலவர்தங் கண். (8)

29. நல்லொழுக்கம் இல்லார் இடஞ்சேர்ந்த நல்
லோர்க்கும்
நல்லொழுக்கம் இல்லாச்சொல் நண்ணுமே
—சொல்லுவிடப்
பாம்பெனவுன் ஞரோ பழுதையே யாஞலும்
தூம்பமரும் புற்றடுத்தாற் சொல். (9)

30. வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
யாக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கை
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே [யொடு
கோலத் தறிவாரோ கூறு. (10)

30. விவேகசிந்தாமணி

(பலவித்வான்கள்)

31. வெள்ளத்தே போகாது
வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போகாது
கொடுத்தாலுங் குறையாது
கள்ளருக்கு மெட்டாது
காவலுக்கு ளமையாது
உள்ளத்தே பொருளிருக்க
ஊரிலுழைத் துழல்வானேன். (1)

32. ஒப்புடன் முகம லர்ந்தே
உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும்
உண்பதே அமிர்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம்
முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு
கடும்பசி யாகுங் கானே. (2)

33. கற்பகத் தருவைச் சார்ந்த
காகமு மழுத முண்ணும்
விற்பன விவேக முள்ள
வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வர்
இப்புவி தன்னிற் கிள்ளை
இலவுகாத் ததனைப் போல
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ
தரிதரி தாகு மம்மா. (3)

31. பஞ்ச தந்திரப் பாடல்

(முயல் சிங்கத்தைக் கொன்ற கதை)

34. குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடிஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி. (1)

35. ஆனிலஞ் சிங்க மே உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா
விதத்தினில் தினம் ஒன்றுக
ஊணுனக் களிப்போம் என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்றாய்
அருந்தி அங் கிருக்கும் நாளில். (2)

36. தனிமுயல் ஒன்றுக் கோர் நாள்
தான் முறை வருத லோடும்
இனி அது விடாது நம்மை
எனினுமோர் எடுப்பெடுத்து
வினையைஇப் போது செய்து
வென்றுநா முய்ந்தோ மாகில்
நனிவிலங் கினத்து முய்யும்
நமக்கும்நற் புகழுண் டென்றே. (3)

37. கருதிஅச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னனென் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் உரைநீ யென்று
மனந்தனில் சினந்து கூற. (4)

38. ஐயநின் பசித்த வேளைக்
கடியனேன் வந்தேன் அங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவிஅங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்யஉன் பக்கல் வந்தேன்
சுவாமிஎன் றிறைஞ்சிநிற்க. (5)

39. சிங்கம்நாம் அல்லால் வேறேர்
சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வாளன்
றழைத்தலும் அழைத்துப் போய் ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்த
தகனிழல் உருவம் தோன்ற. (6)

40. தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துளங்கியே உயிரிழந்த
தென்னலா லுபாயத் தாலே
யாவையும் வெல்ல லாமென்
றுன்னிநீ முயன்றெந் நாளும்
ஊக்கமொ டுழைத்து வாழ்வாய். (7)

செய்யுட் பகுதி

அரும்பதவுரை

I வாக்குண்டாம்

1. நன்றி – உபகாரம்; தளரா – வாட்டமடையாமல்; தாள் – அடி.
2. நல்லார் – நற்குணமுடையவர்; கல் – கருங்கல்; காணும் – நிலைபெற்று விளங்கும்; ஈரம் – அன்பு.
3. அடுத்து – மேலும் மேலும்; கருமங்கள் – தொழில்கள்; தொடுத்த – கிளைத்த; பருவம் – உரியகாலம்.
4. ஆம்பல் – அல்லி; நுண் அறிவு – நுட்ப புத்தி.
5. நலம் – பயன்; இணங்கி – கூடி; உரை – சொல்.
6. தீயார் – கெட்ட குணமுடையவர்; திரு – பயன்.
7. நெல் – நெற்பயிர்; பொசியும் – ஊறிக்கசியும்; தொல் – பழைய.
8. பண்டு – முன்; விண்டு – நீங்கி; கொண்ட – நீங்காத; ஆற்றல் – வல்லமை; ஏற்ற – எடுத்துக்கொண்ட.
9. கவை – பெருங்கிளைகள்; கொம்பு – சிறுகிளைகள்; சவை – கற்றோர் கூட்டம்; குறிப்பு – நோக்கம்.
10. அற்ற – (நீர்) வற்றிய; அறு – நீங்கிப்போகிற; உற்றுழி – (வறுமை) வந்தவிடத்து; தீர்வார் – நீங்குபவர்; ஓட்டி - (தாமும் வருத்தத்தைச்) சேர்ந்து அனுபவித்துக் கொண்டு; உறுவார் – பொருந்தியிருப்பவர்; உறவு – உறவினராவர்.
11. மாந்தர் – மனிதர்; குறைத்தல் – வெட்டுதல்.
12. மாசு – குற்றம்; சீர்தூக்கல் – ஆராய்ந்துபார்த்தல்; சிறப்பு – பெருமை.

II நல்வழி

13. பெருக்கு – வெள்ளம்; உலகு – உலகத்தோரை; ஊட்டும் – உண்பிக்கும்; ஏற்றவர் – இரந்தவர்; நல்லகுடி – உயர்குடி; நல்கூர்ந்தார் – ஏழைகள்.

14. வீற்றிருந்த – பெருமையாக வாழ்ந்த; ஏற்றம் – உயர்வு; ஒப்பு – சமானம்; பணி – தொழில்.

15. பெற்றூர் – தாய் தந்தையர்; நாட்டார் – தேசத்தார்; உற்றூர் – சுற்றத்தார்; உகந்தார் – சினேகித்தவர்; மற்றூர் – அன்னியர்; இரணம் – காயம்; சரணம் – அடைக்கலம்.

16. தீயனுய் – பாவமுடையவனுய்; நல்லார் – (தன்னிடம் அன்புவைத்த) பெண்டிர்; மதி – அறிவு.

17. இரந்து – வேண்டி; சுரந்து – பெருக்கி; அமுதம் – பால்; கற்றூ = கன்று + ஆ. – கன்றையுடைய பசு; கரவாது – ஒளிக்காமல்; அளிப்பர் – கொடுப்பர்.

18. இடும் – உண்டாக்கும்; மடு – பள்ளம்; ஏறிடும் – மேடாகும்; மாறிடும் – மேடானது பள்ள மாகும்; சார்பு – துணை; உள் – மனம்; நீர்மை – தன்மை; வீறும் – சிறப்படையும்.

19. கல்லான் – படியாதவன்; இல்லாள் – மனைவி; ஈன்று எடுத்த – பெற்றுவளர்த்த; செல்லாது – பயன் படாது.

20. பூவாதே – காய்கள் தோன்றுவதற்குக் காரணமான பூக்கள் தோன்றுமலே; ஏவாதே – ஏவாமலே; தூவா – தூவி; வித்து – விதை; பேதை – மூடன்; உணர்வு – அறிவு.

III நீதி வெண்பா

21. ஈவோர் – கொடுப்பவர்; (ஈவோர்க்கு விழி ஏழாவது, கொடுக்கும் கைவிரலின் நகக்கண்கள் ஐந்தோடு அவர் கண்கள் இரண்டும் சேர ஏழென்றுகொள்க.) அனந்தம் – முடிவில்லாதது; அருள் – கருணை; ஞானம் – அறிவு.

22. தேர்ந்து – ஆலோசித்து; மனத்தாபம் – மனவருத்தம்; புரிவது – செய்வது; செய்ய – செம்மையான; குடி – குடும்பம்; நகுலன் – கீரி; மறைப்பொற்கொடி – பிராமணஸ்திரீ.

23. எய்தும் – இருக்கும்; வாய்த்த – பொருந்திய; நோக்க – பார்க்க; அரவு – பாம்பு; பைங்கணரவு = பசுமை + கண் + அரவு; துர்ச்சனர் – கெட்டவர்.

24. பொற்பு – அழகு; புண்ணியர் – கருமவான்கள்; புல்லியர் – கீழ்மக்கள்.

25. புத்திரப்பேறு – மக்களைப் பெறுதல்; புதல்வன் – மகன்; பொன் – அழகு; கொடியே – கொடிபோன்ற பெண்ணே.

26. சின்னம் – சிதைவு; பட – உண்டாக; நலிதல் – வருத்துதல்; உத்தமர் – நல்லோர்; நயந்து – மிகுந்து.

27. தூயவர் – நல்லவர்; துன்னற்க – சேரவேண்டாம்; தண் – குளிர்ச்சி பொருந்திய; ஒளிய – பிரகாசத்தையுடைய; சேயிழை – நல்ல ஆபரணங்களை அணிந்த பெண்; மாணிக்கம் – நாகரத்தினம்; இழை – ஆபரணம்.

28. வினைவேறுபட்டார் – கெட்டவர்; மேவும் – இருக்கும்; அனமே! – அன்னப் பறவைபோல அழகாக நடப்பவளே!; வான் – சிறந்த; கனம் – பெருமை; மேலவர் – மேன்மக்கள்.

29. நல்லொழுக்கம் இல்லார் – துர்ச்சனர்; நல்லொழுக்கம் இல்லாச் சொல் – அபகீர்த்தி; நண்ணும் – அடையும்; உன்னுரோ – நினைக்கமாட்டாரோ?; பழுதை – வைக்கோற் புரி; தூம்பு – வளை.

30. யாக்கை – உடம்பு; நீடு இசை – இனிமை மிகுந்த குரல்; கோலம் – உருவம்.

IV விவேக சிந்தாமணி

31. வெந்தணல் – வெம்மையை உடைய நெருப்பு; கொள்ள – பிறர் கவர்ந்துகொள்ள; உள்ளத்துப் பொருள் – மனத்தில் நிலைத்திருக்கும் செல்வம், அதாவது கல்வி யறிவு; உழல்வது – வருந்தித் திரிவது.

32. அமிர்தம் – பாற்கடலில் பிறந்தது, தேவர் உணவு, சுவை மிகுந்தது, சாவைத் தவிர்ப்பது; முப்பழம் – வாழை மா பலாவின் பழங்கள்; அன்னம் – சோறு; கப்பிய – மேலோங்கிய; கடும்பசி – மிக்கபசி.

33. கற்பகத்தரு – வேண்டியவற்றைத் தரும் தெய்வ விருக்ஷம்; விற்பனவிவேகம் – கல்வியறிவு; கிள்ளை – கிளி; அற்பர் – கீழ்மக்கள்.

V பஞ்சதந்திரப் பாடல்

34. குறு – சிறு; செறியும் – மரஞ் செடி கொடிகள் நிறைந்த; உறு – பொருந்திய; விலங்கு – மிருகங்கள்; ஊன் – மாமிசம்.

35. அடவி – காடு; ஊல் – உணவு; ஆணை – ஆக்கினை; அருந்தி – தின்று.

36. தனி – தனித்த; எடுப்பு எடுத்து – தந்திரம் செய்து; வினை – காரியம்; வென்று – ஜயித்து; உயர்ந்தோர் மாகில் – உயர்வை அடைந்தோமாஞல்; நனி – மிகவும்; உய்யும் – பிழைக்கும்; நல்புகழ் – நல்லகீர்த்தி.

37. கருதி – நினைத்து; பெருமதவேழம் – அதிக மதத்தை யுடைய யானை; பிந்துவது இல்லை – தாமதித்து வந்தது இல்லை; வருவது ஏன்?–வருவதற்குக் காரணம் என்ன?; சினந்து – கோபங்கொண்டு.

38. ஐய – ஐயனே!; அடியனேன் – அடிமையாகிய நான்; வெய்ய – கொடிய; வெருவி – அஞ்சி; பைய – மெல்ல; ஆங்கு – அவ்விடத்தில்; பரு–பெரிய; முழை–குகை; துய்ய – பரிசுத்தமுடைய; உன்பக்கல் – உன்னிடம்; சுவாமி! – எசமானே!; இறைஞ்சி – வணங்கி.

39. பங்கம் – சேறு; புனல் – நீர்; பாழ்ந்துரவு – பாழான கிணறு.

40. நிழலைத்தானே – நிழலையே; தன்னு – நிறைந்த; துளங்கி – கலங்கி; உன்னி – எண்ணி.

Printed in India at Everymans Press, Madras.

LONGMANS' TAMIL READER. BOOK V
BY M. V. RAMANUJACHARIAR
Price 6 As.